Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–09 | 23–06–2004 | புதன்கிழமை | ஓசை –126




## தென்மராட்சி-உயர்பாதுகாப்பு வலயத்தில்

# பெரும் போராட்டத்தின் பின் வீடுகளை பார்வையிட்ட கரம்பகம் கிராம மக்கள்!

## கிராமமே அழிவுற்றுவிட்டதாகக் குமுறல்

(அலுவலக செய்தியாளர்)

**தென்மராட்சி எழுதுமட்டுவாள் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கரம்பகம் கிராம மக்கள் சிறிலங்காப் படையினரின் கெடுபிடிகளின் மத்தியில் தமது வீடுகளைப் பார்வையிட்டு கண்ணீருடன் திரும்பிய அவலம் நேற்று தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது. இவர்கள் தமது கிராமம் அழிக்கப்பட்டுவிட்டதாகக் குமுறுகின்றனர்.**

இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதம் தமது சொந்த இடமான கரம்பகம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 180 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சிறிலங்காப் படையினரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை காரணமாக தமது சொந்த இடத்தில் குடியமர முடியாது யாழ். குடாநாட்டிலும், வன்னியிலும் சிதறுண்டு பெரும் கஷ்ரங்களின் மத்தியில் அகதி வாழ்வை வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் வீடுகளைப் பார்வையிட அனுமதி அளிப்பதாக சிறிலங்காப் படையினர் உறுதியளித்ததையடுத்து மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 180 குடும்பங்களில் 100 வரையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நீண்ட தூரங்களில் இருந்து பெரும் சிரமத்தின் மத்தியில் காலை 8.00 மணிக்கு எழுதுமட்டுவாள்,

(12ஆம் பக்கம் பார்க்க)



எழுதுமட்டுவாள் பகுதியில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு படையினரிடம் கோரி நிற்கும் மக்கள். (படம்:- செல்வா)

## கருணா அரசியல் நீரோட்டத்தில் இணைய உற்சாகம் கொடுக்கிறாராம் டக்ளஸ்

கருணாவுடன் தனக்கு நீண்டகாலமாகத் தொடர்பு இருந்ததாகவும், அவர் அரசியல் நீரோட்டத்தில் இணைய விருப்பம் தெரிவித்ததால் அதற்கான முயற்சியில் தான் ஈடுபட்டு வருவதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கருணா; விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரச்சினைப்பட்டு வெளியே வந்த பின்னர் தன்னுடைய முயற்சிகள் மிக அதிகளவில் இருந்ததாகவும், தான் கருணாவை சனநாயக நீரோட்டத்திற்கு வருமாறு உற்சாகம் கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

தற்போது கருணா சிறிலங்காவின் மைய அரசியல் நீரோட்டத்திலே களமிறங்கி ஓர் அரசியல் கட்சியை உருவாக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.மு.கூட்டத்தில் கைக்குண்டுவீச்சு சு.க. கிளைத்தலைவர் பலி; பலர் காயம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிளைத்தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கலவானவெவேகந்தவில் நேற்று இடம் பெற்ற இந்தக்குண்டு வீச்சில் கொல்லப்பட்டவர் முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளராக இருந்து பின்னர் கடந்த தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை இந்தக் குண்டுத் தாக்குதலின் போது காயமடைந்த மேலும் பலர் இரத்தினபுரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இம்முறை நடைபெறவுள்ள மாகாண சபைத்தேர்தல் பிரசாரத்தில் நடைபெற்ற முதலாவது கொலைச் சம்பவமாகும்.

இதேவேளை இந்தத்தாக்குதல் தொடர்பான விசாரணையில் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக பல்கலை. ஊழியர்–நிர்வாகத்தினர் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக இன்று பிற்பகல் 2.00மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் ஊழியர்களுக்குமிடையேயான சந்திப்பு ஒன்று நடை பெறவுள்ளது.

நேற்றுப் பல்கலைக்கழக மாண வர்கள் இருதரப்பினரையும் சந்தித் துப்பேசியதன் மூலம் இன்றைய சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டது. நேற்று நடத்தப்பட்ட அடையாள பகிஷ்கரிப்புக்கு பின்னர் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக நேற்றுமாலை இன்றைய் சந்திப்பிற்கு இணக்கம் காணப்பட்டது.

இச்சந்திப்பின் போது பல் கலைக்கழக நிர்வாகத்தின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஊழியர் சங்கப்பிரதிநிதிகள், மாணவர் அமைப்பு பிரதிநிதிகள், சர்வதேச மாணவர் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஏழு அம்சக்கோரிக்கையினை வலியுறுத்தி ஊழியர்சங்கத்தினால் கடந்த 14ஆம் திகதி முதல் நடாத்தப்பட்டு வரும் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைகள் தாமதமாதல் புலிகளை நிர்வாக ரீதியில் பலமடையச்செய்யும்!

### ரொய்ட்டர் தெரிவிப்பு

சிறிலங்காவின் சமாதான முன்னெடுப்புக்கள் பின்தள்ளிப் போனாலும் யுத்தமென்பது தூரத்திலேயே இருக்குமென ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இதேவேளை அரசாங்கம் தொடர்ந்தும் இவ்வாறான காலதாமதங்களை மேற்கொண்டு வருவது தமிழீழ விடுதலைப்புலிகளை நிர்வாக ரீதியில் பலமடையச் செய்யும் ஒரு நடவடிக்கையாகவே முடியும் எனவும் அது தெரிவித்துள்ளது.

எனவே அரசாங்கம் இதனைத் தடுக்க வேண்டுமானால் உடனடியாகப் பேச்சுவார்த்தையை அது ஆரம்பிக்கவேண்டுமென ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்துஸ்தான் டைம்ஸ் தெரிவிக்கையில், கருணாவின் விவகாரம் தொடர்பாக எழுந்துள்ள புதிய பிரச்சினையானது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப்பேச்சுவார்த்தையில் ஒரு கரும்புள்ளியை உருவாக்கியுள்ளது.

இதனைத் தவிர்க்கவேண்டுமானால் கருணாவை தமிழீழ விடுதலைப்புலிகளிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

யுனிசெவ் வெண்புறா - வன்னி

(9728)

## வரிவிளம்பரம்

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

**யூலை 24**

துரித வகுப்புக்கள் கிளி/புதிய உயர்கல்வி நிலையத்தில் (பழைய புகையிரத நிலைய வீதி) நடைபெறுகின்றது. சனிக்கிழமை 1.00 மணி. (26-06-2004) (4731)

• • • • • • • • • • • • • • • •

**தவறிவிட்டது**

விசுவமடுவிற்கும், கிளிநொச்சிக்குமிடையில் மஞ்சல் கயிற்றுடன் கூடிய கொம்புத் தாலி கடந்த 20-06-2004 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பிலுள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-9133)

## ஆனிமாதத்தில் விசேட சலுகை

மன்னார் மாவட்டத்தில் வதியும் சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், சுவாசப்பை மற்றும் இருதயத்துடன் சம்பந்தப்பட்ட நோய்வு, மாரடைப்பு உள்ள நோயாளர்களின் வசதிக்காக மெடிலேப் ஸ்தாபனத்தினர் பின்வரும் சலுகையை அளிக்க முன்வந்துள்ளனர். இவர்களுக்கு

* ஈ.சி.ஜி. எடுத்து நிபுணத்துவ ஆலோசனையும்,

* சிறுநீரில் சர்க்கரை, புரோட்டீன் இரண்டையும் பார்த்து,

* உடல் எடை,உயரம் பார்த்து உங்களுடைய சுகாதாரக் குறியை (அதாவது BMI) பார்த்து அதற்குரிய ஆலோசனையை வழங்கவும் அத்துடன்,

* உங்களுடைய அன்றாட உணவின் கொலஸ்ரோலின் வீதத்தை விசேட அட்டவணையில் இருந்து அறிந்து கொள்வதற்கும் எல்லாமாக 300 ரூபா மட்டும் அறவிடப்படும்.இந்த விசேட சலுகை ஆனி 20ஆம் திகதி தொடக்கம் ஆடி 31ஆம் திகதி மட்டும் அமுலில் இருக்கும்

**முன்கூட்டியே பதிவுசெய்து கொள்வது நல்லது.**

T.P:- 023 2232303

தகவல்:- **இயக்குனர், மெடிலேப் வைத்தியசாலை, டாக்டர் குருசின் மாடிக்கட்டடம், பிரதான வீதி மன்னார்.**

(சி -9851)



முத்துஐயன்கட்டு வலதுகரை தான்தோன்றி நாகதம்பிரான் ஆலய வருடாந்த



## ஆனி உத்தரப் பொங்கல் விழா

நிகழும் தாரண வருடம் 10ஆம் நாள் 24-06-2004 வியாழக்கிழமை இரவு விஷேட அபிஷேக ஆராதனையும், அதனைத் தொடர்ந்து பொங்கலும் நடைபெறும். 25-06-2004 பகல் அன்னதான வைபவமும், அதனைத் தொடர்ந்து ஏல விற்பனையும் நடை பெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து எம்பெருமான் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

(4655) **ஆலய பரிபாலன சபை.**

## 3ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

பன்னீர்சிந்த
**08-06-1955**



கண்ணீர் சிந்த
**28-03-2004**

### அமரர் உயர்திரு. சொக்கலிங்கம் பாலச்சந்திரன்

*(கிராம அலுவலர் – தரம் I, J/79)*

*சிறாம்பியடி – யாழ்ப்பாணம்.*

அன்பும் அருளும் ஆளுமையும் கொண்டெம்மை
என்றும் பிரியாது எமைக் காத்த அப்பாவே
சென்ற வழியில் உயிர் திசைமாறிப்போனதப்பா
அன்று தொடக்கம் ஆழ்துயரில் அம்மாவும்
பொன்றாக் கவலையுடன் புலம்புகின்ற பிள்ளைகளின்
குன்றாத் துயர் துடைக்க குவலயத்தே வந்திடப்பா
அப்பா தம் ஆத்மா ஆறி அடங்கிடவே
தப்பாமற் சாந்தி அளிப்பாய் தயாபரனே.

28.03.2004அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவ றைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்தெம்மை ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி, கடிதம், தந்தி, ஈமெயில் மூலமும் எம்முடன் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பத்திரிகைத் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியதோடு பல வழிகளிலும் எமக்கு உறுதுணையாக நின்ற உறவினர்கள், சக ஊழியர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, 24.06.2004 அன்று காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நிகழும் வீட்டுக் கிருத்திய நிகழ்வில் பங்கு கொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல:- 31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, (கச்சேரியடி),
யாழ்ப்பாணம்.
T.P-0777-777981

(சி-10104)

தகவல்:
**குடும்பத்தினர்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உழைப்பால் உயர்ந்து ஓய்வு பெறும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்**

**திரு.வி. சிற்றம்பலம் அவர்கள்**

கடந்த 31.05.2004ஆம் திகதியுடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறும் கோட்டக்கல்விப்பணிப்பாளர் வி.சிற்றம்பலம் அவர்கள் .06.10.82இல் நுவரெலியா மாவட்டத்தில் முதல் நியமனம் பெற்றார். கிளிநொச்சி மாவட்டத்திற்கு 04.05.87இல் கடமைக்கு வந்த இவர், கிளி /பூநகரி மகாவித்தியாலயம், கிளி / கிளிநொச்சி ம.வி. கிளி கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியபாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவியவர்.

விடாமுயற்சி, தன்னம்பிக்கை, உள்ளதை உள்ளவாறே கூறும் துணிவு ஆகியன திரு. சிற்றம்பலம் அவர்களுடன் கூடப்பிறந்த சொத்துக்களாகும். இதனால் கோட்டக்கல்விப்பணிப்பாளர் பதவி இவரைத்தேடிவந்தது. இவர்16.02.2001இல் கண்டாவளைக் கோட்டக்கல்வி பணிப்பாளராகக் கடமையேற்றார். இதனால் அக்கோட்ட அதிபர்கள் மத்தியில் நீங்கா இடம்பெற்றார் தொடர்ந்து 01.06.2003இல் கரைச்சிக்கோட்டக்கல்விப்பணிப்பாளராகக் கடமையேற்று தனது கடமையை அகல விரித்து முழுமனதுடன் உழைத்தார் புள்ளிவிபரங்கள் யாவற்றையும் பதிக்க தனது மனதையே கணினியாக்கி அதிலும் வெற்றிகண்டார். எப்போது எதைக்கேட்டாலும் பதிவுகளைப் பார்த்துத்தான் சித்தர் பதிலளிப்பார் என்றில்லை. சரியான தரவுகளைத் தனது ஞாபகத்திற்கு கொண்டுவந்து கொடுப்பதில் சிறந்தவர். இச்சிறப்பினால் கண்டாவளை கரைச்சிக்கோட்டங்களைக் நிர்வகிக்கும் பொறுப்பு இவரை வந்தடைந்தது. தனது கடமையின் நிமித்தம் பிழையெனில் பிழைதான் என்று நெற்றிக்கு நேரே கூறும் நக்கீரத்தன்மை சித்தருக்கேயுரிய தனிச்சிறப்பாகும். 31.05.2004 உடன் ஓய்வு பெறும் திரு.சிற்றம்பலம் அவர்கள் சிறந்த ஒரு நிர்வாகியாகவும், நல்ல ஒரு முகாமையாளனாகவும் அதிபர்களை வழி நடத்தியமை அவரது சேவைக்குக் கிடைத்த வெற்றியாகும். இவரது வாழ்வு தொடர்ந்து சிறக்க வாழ்த்துவோம்.

**கரைச்சிக்கோட்ட அதிபர்கள்.**

(சி-9729)



கல்வயல் - பெருங்குளம்அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## மஹா கும்பாபிஷேகம்

**மஹா கும்பாபிஷேகம் 25.06.2004 வெள்ளிக்கிழமை பகல் 9.31 மணி முதல் 10.00 மணிவரை**

எண்ணைக்காப்பு சாத்தல் 24.06.2004 வியாழக்கிழமை பகல் 12.00 முதல் புரிதாக அமைக்கப்பட்ட எழுந்தருளி வன்னி தேவசேனா சமேத முருகப்பெருமானுக்கு கும்பாவிஷேகம் நிகழும் கும்பாவிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேம் 15 தினங்கள் நடைபெறும் தேவாஸ்தான கும்பாவிஷேக் பிரதிஷ்டா பிரதமகுரு சிவசிறி க. ச. சோமாஸ்கந்த குருக்கள் .

குறித்த நேரத்தில் நிகழ்வுகள் நடைபெறும் பகல் அன்னதானம் நடைபெறும். விஷேடகுறிப்பு: விநாயகருக்கு பால் காப்பு சாத்தல் இடம்பெறும்.

விஷேடமேளக்கச்சேரி: தென்மராட்சியின் தலைசிறந்த நாதஸ்வர மேதை கானவாநிதி கே. எம். பஞ்சாபிகேசன் குழுவினரும் சத்தியநாதன் குழுவினரும்

நிகழ்ச்சிகள் யாழ் ஒலிபரப்பில் நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படும்

கல்வயல் பெருங்குளம்,
சாவக்கச்சேரி

இங்ஙனம்
அருள்வாரிக்கும் ஆலயபரிபாலன சபை

கும்பாபிஷேகம்சிறப்புற வாழ்த்துவோர்...

**சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்**
இல. 45, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். T.P . 021-2226059

மிகவிரைவில் சாவகச்சேரி நகரில்
*சிவா நகைமாடம்*

**சாரங்கா நகைமாடம்**
இல. 157/1, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். T.P- 021-2222480

(சி-10103)

# உலகில் யூதர்களுக்கெதிரான கிளர்ச்சி குறித்து விசாரணை நடத்த தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

### -ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலர் கொபிஅனான்

(நியூயோர்க்)


**உலகில் யூதர்களுக்கு எதிராக பாரியளவிலான கிளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் தெரிவித்துள்ளார். இவ்விடயங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நாடுகள் ஸ்தாபனம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முதலாவது யூத தத்துவங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்; பலஸ்தீன மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமெனக் கூறுகின்ற அதேவேளை அக்கோரிகையைக் காரணமாக வைத்து இஸ்ரேல் மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாதெனத் தெரிவித்துள்ளார். இதேவேளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு மட்டுமே மதிப் பளிக்கின்றதெனவும், இஸ்ரேலிய மற்றும் யூதர்களின் உரிமைகளை உதாசீனம் செய்து விடுகிறதென தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கடந்த திங்களன்று ஜப்பானில் வீசிய சூறாவளியின் போது மீன்பிடித்துறை முகம் ஒன்றின் மீது மோதும் அலையின் சீற்றம்.



பங்களாதேசில் இந்திய யானை ஒன்றுக்கு அந்திரக்ஸ்வைரஸ் தடுப்பூசி ஏற்றப்படுகிறது.

# ரஷ்யாவில் செச்சினியத் தீவிரவாதிகள் தாக்குதல் மாநில அமைச்சர், 25 பொலிசார் உட்பட 50 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் இஸ்குஸ்தியா மாநில பொலிஸ் நிலையம் மீதும் அதனை ஒட்டிய காவல் நிலையங்கள் மீதும் செச்சினிய தீவிரவாதிகள் 200 பேரைக் கொண்ட அணி தாக்குதல் நடத்தியதில் மாநில உள்துறை அமைச்சர் உள்ளிட்ட 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் தனிநாடு கேட்டும் போராடி வரும் செச்சினிய தீவிரவாதிகளின் இத்திடீர்த்தாக்குதலில் 25 பொலிஸாரும் அரசாங்க அதிகாரிகள் சிலரும் பொது மக்களும் தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் பாரிய ஆயுதங்கள் சகிதம் பொலிஸ் நிலையத் திற்கண்மையில் இருந்த அரசாங்க கட்டடங்கள் மீதும் தாக்கதல் நடத்தியுள்ளனர். இதில் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவலறிந்த ரஷ்ய இராணுவத்தினர் அங்கு விரைந்து சென்று தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டதாக ரஷ்யச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் அங்கு பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பரபரப்பாக விற்பனை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி பில் கிளின்டன் எழுதிய MY LiFE என்ற சுயசரிதைப் புத்தகம் நேற்று முன்தினம் நியூயோர்க்கில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் நேற்று அமெரிக்காவில் பரபரப்பாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




இஸ்தான்புல் நகரில் பாகிஸ்தான் ம.மு.ஆதரவாளர்கள் அதிபர் முஷாரப்புக்கு ஆதரவாக கோஷமெழுப்புகின்றனர்.



ஈராக்கின் அபுகிராய்ப் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது ,மரணமடைந்த கைதியொருவரின் உடலின் முன்பு காட்சிதரும் அமெரிக்க இராணுவ சார்ஜன்ட் சார்ள்ஸ்கிரனரின் புகைப்படம் (ஏ.பீ.சீ.இ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.)

# இரு கிளர்ச்சிக் குழுக்களிடையே மோதல் ஐவரி கோஸ்டில் 22 பேர் உயிரிழப்பு

(லண்டன்)

ஐவரிகோஸ் நாட்டில் பகைமை பூண்ட இரு கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் நடந்த சண்டையில் 22 பேராவது கொல்லப்பட்டிருக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஒரு குழுவின் அரசியல் தலைவரை மற்றைய குழுவைச் சேர்ந்தோர் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கலகங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை.

ஸ்தம்பிதமடைந்த சமாதான முயற்சிகளைப் புதுப்பிப்பதற்காக பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என அந்நாட்டின் சனாதிபதி லோரன்ஸ் கபாக்பூவும், எதிர்க்கட்சித் தலைவர்களும் அறிவித்துள்ள வேலையிலேயே இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்த சிவில் யுத்தம் முடிவடைந்தாலும் ஐவரிக் கோஸ்டில் அமைதியை நிலைநாட்டுவதென்பது இலகுவான பணியாக இருக்காது என்பதையே இச்சம்பவம் கோடிட்டுக்கு காட்டுகின்றது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்

# பிரிட்டனின்3 கடற்படைக் கப்பல்கள் மாலுமிகளுடன் ஈரானால் பிடிப்பு

(தெஹ்ரான்)

ஈரான் பிரிட்டனைச் சேர்ந்த மூன்று கடற்படைப் படகுகளை தடுத்து நிறுத்தியதுடன் எட்டு மாலுமிகளையும் கைது செய்துள்ளது.

ஈராக்கிய எல்லைக்கருகே தமது கடற்பரப்பை ஊடுருவிய சமயமே படகுகள் கைப்பற்றப்பட்டதாக ஈரானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரானுக்கும்,ஈராக்கிற்கும் இடைப்பட்ட "சான்ட் அல் அராப்" நீரிணையில் தமது இராணுவ வீரர்களுடன் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட விடயத்தினை பிரிட்டன் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் ஈராக்கிய பொலிசாருக்கு பயிற்சியளிக்கும் முயற்சிகளில் உதவி செய்வதற்காகவே பிரிட்டன் பிரஜைகள் அனுப்பப்பட்டதாக அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.



ஈராக்கில் பணியாற்றும் பொருட்டு அனுப்பப்படவுள்ள தென்கொரிய இராணுவம் பயிற்சியிலீடுபடுவதையும், அதற்கு எதிர்ப்புத்தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் தென்கொரிய மக்களையும் காணலாம்.

# முன்கூட்டியே தேர்தல் நடத்தும் திட்டம் அவுஸ்.அரசால் கைவிடப்பட்டது?

அவுஸ்திரேலியாவில் ஆகஸ்ட் மாதம் அளவில் முன்கூட்டியே பொதுத் தேர்தலை நடத்துவதற்கு பிரதமர் ஜோன்ஹவாட் திட்டமிட்டிருந்த போதிலும் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பிலே எதிர்க்கட்சியான தொழிற்கட்சி முன்னணியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. தேர்தலை இலக்காக வைத்து ஜோன் ஹவாட் பாரியளவிலான பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 5 அமெ.படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் வடக்குப் புற நகரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் நான்கு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே சமயம் மற்றுமொரு சம்பவத்தின் போது அமெரிக்க வீரர் ஒருவர் பலியாகியுள்ளதா கவும் தெரிவிக்கிப்படுகின்றது. இதனைவிட ஈராக்கியர்களால் கடத்திச் செல்லப்பட்ட தென்கொரிய வர்த்தகரான 33 வயதுடைய கெம்சுன் கில்லை ஈராக்கியர்கள் கொலை செய்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மாமர நிழலில்இயங்கும் முன்பள்ளி உறுதிமொழிகளோடு நாட்கள் நகர்வு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் அத்தார் திட்டப் பகுதியில் இயங்கிவரும் கணேஸ் முன்பள்ளி, கட்டடம் உட்பட எந்தவொரு வசதியும் அற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

இந்த முன்பள்ளியில் தற்போது இருபதிற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். முன்னர் இதே கிராமத்தில் மற்றுமொரு இடத்தில் சிறிய கட்டடமொன்றில் இயங்கிவந்த இம் முன்பள்ளி, அக் கட்டடம் மழைகாரணமாக உடைவுக்குள்ளானதால் இப்போது ஒதியமலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்குரிய காணியில் அமைந்துள்ள மாமரநிழல் ஒன்றில் இயங்கி வருகின்றது. இந்த மரநிழலில் கற்பிக்கத் தொடங்கி ஆறு மாதகாலமாகி விட்டது. இதுவரை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எதுவும் கட்டடம் அமைப்பதற்கான ஒழுங்குகள் எதையும் மேற்கொள்ளவில்லை. மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்குப் பாய்கூட இல்லாத நிலையில் மண்ணில் அமர்ந்து கற்கவேண்டியுள்ளது. ஆசிரியருக்குரிய தளபாடமும் இல்லை. மாணவர்களுக்கு எழுத்துருக்களை விளக்குவதற்கு கரும்பலகையோ, வெண்கட்டிகளோ எதுவும் இல்லை.

இது தொடர்பாக முன்பள்ளி ஆசிரியை து.வனிதா கூறுகையில்மாணவர்கள் கற்பதற்கு மிக ஆர்வமாக இருக்கின்ற நிலையில் சிறுவர்களுக்கு ஏற்ற விதத்தில் எழுத்துக்களைக் கொப்பியில் எழுதி விளங்கவைக்க முடியாததால் இவர்களின் கல்வி நிலை பின்னடைவதற்கான அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்குவதற்கான ஒழுங்குகளை இதுவரை எந்த வொரு நிறுவனமும் பொறுப்பேற்கவில்லை. சம்பந்தப்பட்டோர் பல தடவைகள் வந்து பார்வையிட்டு ஏற்ற வசதிகளைச் செய்து தருவதாக உறுதியளித்து சென்றுள்ளனர். பல தடவைகள் இவ்வாறு வாக்குறுதியளித்த போதும் எந்த வித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் நடைபெறவில்லை என்றார்.

தற்போது போசாக்கு உணவுகளை ஒரு பிள்ளையின் பெற்றார் என்ற ரீதியில் வழங்கி வருகின்றனர். ஆனால் இங்குள்ள மக்கள் பெரும் கஷ்ரத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் இக்கிராமத்தினரால் வேறு உதவிகளை இம்முன்பள்ளிக்கல்விக்கு செய்து தரக்கூடியதாக இல்லை. ஆனால் பெற்றார் தமது பிள்ளைகள்படிக்க வேண்டுமென்ற ஆர் வத்தில் உள்ளனர். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களான கொப்பி,பென்சில் போன்றவற்றைக்கூட அவர்களால் வாங்கிக்கொடுக்கக்கூடிய வசதி இல்லை. முன்பள்ளிக்கு எந்த விதமான கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவில்லை என அம்முன்பள்ளியின் ஆசிரியர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்; “எமது பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டுமென்ற ஆர்வம் எமக்குண்டு. ஆனால் எமக்கு வசதி குறைவாக இருப்பதால் முன்பள்ளிக் கட்டடத்தையோ, வேறு வசதிகளையோ எம்மால் ஏற்படுத்திக் கொடுக்க முடியாதுள்ளமை' எமக்கு மனவேதனையைத்தருகிறது. என்கின்றனர்.



மேலும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இக்கிராமத்து பிள்ளை களுக்கு சிறந்த எதிர்காலத்தை அமைத்துத்தர சம்பந்தப்பட்டோர் முன்வர வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (லோ.ச)

## நியாப் திட்டத்தில் புனரமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(மல்லாவி)

மல்லாவி நகர்ப் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் உலகவங்கியின் நிதியுதவியுடன் புனரமைப்புச்செய்யப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தின் திறப்புவிழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கிராமசேவையாளர் சு.இரத்தினகோபால் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை நியாப்பொறியியலாளர் கோ.சிவநாதன், விவசாயப்போதனாசிரியர் திருமதி.பு.சிவபாலன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் போராளி ஈழக்கண்ணன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பொதுநோக்கு மண்டபத்தை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திருமதி-ப.தியாகராசா நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். வரவேற்புரையை கிராமஅபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.பிரமதேவன் நிகழ்த்தினார். தலைமையுரையைத் தொடர்ந்து கருத்துரைகளை அரசாங்க அதிபர், விவசாயப் போதனாசிரியர், நியாப்பொறியியலாளர் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (24)

## மட்டக்களப்பில் டெங்குக்காய்ச்சலால் 16 மாதங்களில் 120 பேர் பாதிப்பு

–மூவர் உயிரிழந்ததாகத் தகவல்

(மட்டக்களப்பு)

கடந்த 16 மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் காரணமாக 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூவர் இறந்துள்ளதாகவும் மாவட்டப் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியத் தொற்று நோயியலாளர் டாக்டர் திருமதி. எஸ். நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இம் மாவட்டத்தில் 65 பேர் டெங்குக்காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டதுடன் இருவர் இந்நோய்காரணமாக இறந்துள்ளனர்.

இந்த ஆண்டு சனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் 55 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் மரணமானதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நோய் கூடுதலாக இம் மாவட்டத்தின் காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பகுதிகளிலேயே அதிகளவு காணப்படுவதாகத் தெரிவித்த அவர் டெங்குநுளம்புகளை அழிக்க இரசாயனப் புகை விசுறும் பணிகளை சுகாதாரப் பகுதியினர் தொடர்ந்து மேற்கொண்டுவருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## கழிவுப் பொருட்களை கொட்டுவதால் ஆபத்து!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதியில் அமைந்துள்ள சோமுமில் பகுதியில் கழிவுப் பொருட்களைக் கொட்டுவதால் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.பழைய சந்தை இருந்த இந்தப்பகுதியினைச் சூழ மக்கள் மீளக்குடியேறியுள்ள இவ் வேளை இப்பகுதியில் கழிவுப்



பொருட்கள் கொட்டப்படுவதால் பிரதேச மக்கள் சுகாதார சீர்கேட்டைஎதிர்கொண்டு வருகின்றனர். குப்பைகள் கொட்டப்பட்டநிலையில் இருக்கும்பகுதியையேபடத்தில்காண்கிறீர்கள். (சோ,து)

## ஆனி உத்தரம்

உருத்திரபுரம் சக்திபுரம் (எள்ளுக்காடு) ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய ஆனி உத்தரத் திருவிழா நடை பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பெற்றுள்ளது. இதனடிப் படையில் எதிர்வரும் 25ஆம் திகதியன்று பகல் அபிஷேக ஆராதனையும், அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம் பெறவுள்ளதென ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (சோ.து)

## நஞ்சருந்தியவர் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

நஞ்சருந்தி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கடந்த ஞாயிறன்று மாலை 3.30 மணியளவில் நஞ்சருந்தியதால் உடல் நிலை மோசமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 4 ஆம் கட்டை பூநகரியைச் சேர்ந்த இராசரத்தினம் சிவலோகநாதன் (வயது 58) என்பவர் சிகிச்சை பலனளிக்காததால் நேற்று முன்தினம் காலை 4.30 மணிக்குச் சாவடைந்துள்ளார். (லோ.ச)

## களஞ்சியத்திற்கு அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)



வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேச கமக்கார அமைப்பிற்கான காரியாலயம் மற்றும் நெற் களஞ்சியக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன் தினம் பிற்பகல் 4.30 மணிக்கு இராமநாதபுரத்தில் நடைபெற்றது.

வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேச கமக்கார அமைப்பின் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கமக்கார அமைப்புக் காரியாலயம் மற்றும் களஞ்சியக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.மேற்படி நிகழ்வில் கிளி. கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், கிராம சேவை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ,து)

## சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்

தற்போதைய நாட்களில் வன்னி மாவட்டத்திலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியுடன் இயங்கிவரும் சிறுவர் முன்பள்ளிகளில் சின்னஞ் சிறார்களின் ஆற்றலை வெளிக்கொண ம் வகையில் விளையாட்டுப்போட ள் நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் கடந்த 12ஆம் கதி குமுழமுனை மாவீரர் ன்பள்ளியில் பெற்றார் ஆசிரியர் ங்கச் செயலர் உதயசீலன் தலை மயில் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நடைபெற்றுள்ளது.

அ போன்று கடந்த 15ஆம் திகதி ம்பிராய் மங்களா முன் பள்ளி ல் சந்திரா தேவி தலைமையி ம், 16ஆம் திகதி தேறாங்கண்டல் கலைமகள் முன்பள்ளியில் பள்ளியாசிரியை சுகிர்தா தலைமையிலும், முழங்காவில் இரணைமாதா நகர் முன்பள்ளியின் 6ஆம் ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

அதே தினம் உடையார்கட்டு கலைமகள் முன்பள்ளி நிகழ்வுகள் பெற்றார், ஆசிரியர் சங்கத்தலைவர் நடேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கடந்த 19ஆம் திகதி தர்மபுரம் ஈழவேந்தன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் புஸ்பராசா தலைமையில் நடைபெற்றது. அதே தினம் தண்ணீரூற்று இளநிலா முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுகள் ஆசிரியையின் தலைமையில் நடைபெற்றது.. (20,19,14,ஆ,34,24,சோ,கு)

## கால்நடைப் பண்ணையாளருக்கு விசுவமடுவில் பயிற்சி செயலமர்வு

(கிளிநொச்சி)

உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையில் தமிழீழ மேம்பாட்டு நிறுவனமும் கால் நடை உற்பத்தி சுகாதார நிறுவனமும் ஒன்றிணைந்து கால்நடை பண்ணையாளர்களிற்கான பயிற்சிச் செயலமர்வு ஒன்று அண்மையில் விசுவமடு தொட்டியடி விவசாயிகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

ஏற்று நீர்ப்பாசன விவசாயிகள் சங்கச் செயலாளர் நி.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த ஈகை வீரன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மங்கல விளக்கினை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ம.பாலசுந்தரம் பரவு நீர்ப்பாசன விவசாயிகள் சங்கப் பொருளாளர் பொ.சிவராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர் தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரைகளை முல்லை.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வே.பூங்குன்றன், காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலைய முகாமையாளர் மகாதேவன், முல்லை. மாவட்ட கால்நடை வைத்தியர் செல்வி சுகந்தினி, முல்லை.மாவட்ட கால் நடை சுகாதார போதனாசிரியர் சூரியகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

பெருமளவான கால்நடைப் பண்ணையாளர்கள், போராளிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கால்நடைகளிற்கு தற்போது பரவி வரும் கால்வாய் நோய் மற்றும் செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் அவசியம் பற்றியும் படக்காட்சியுடனான விளக்கங்களும் வழங்கப்பட்டன. (15)

## பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்

# ஆங்கிலப் பாடநெறி இடைநிறுத்தம் குறித்து யாழ்.பொது அமைப்புக்கள் ஆட்சேபம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலப் பாடஆசிரிய மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி இடை நிறுத்தப்பட்டமை குறித்து யாழ்.பொது அமைப்புக்களால் ஆட்சேபங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுவரை காலமும் யாழ்.ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்று வந்த மேற்படி ஆங்கிலப்பாட கற்கை நெறி இவ் ஆண்டுடன் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்படி ஆங்கிலப் பாட நெறியைக் கற் பதற்காக யாழ். பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு தெரிவு செய்யப் பட்ட ஆசிரிய மாணவர்கள் தமக்குரிய பாட நெறியைத் தொடங் குவதற்கு மகரகமவில் உள்ள ஆசிரியர் பயிற்சிக கலாசாலையில் சென்றுபயில வேண்டிய் சூழ்நிலைதோன்றியுள்ளது. இவ்வாறு யாழ்.ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் தாயகப்பகுதி யாழ்.ஆசிரிய மாணவர்கள் தமக் குரிய பாடநெறிகளைத் தொடருவதற்காக மகரகமவில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு செல்லும் பொழுது அங்கு இன, மொழி ரீதியான புறக்கணிப்புக்களாலும், ஏனைய வழிகளிலும் பாதிக்கப்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டியே யாழ்.மாவட்டத் திலுள்ள கல்விசார் பொது அமைப் புக்கள் பலவற்றாலும் ஆட் சேபங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. (33)

## -யாழ்.குடாநாட்டில்-

# தனியார் கல்விநிலையங்களின் சுகாதார நிலையைப் பேண கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் தனியார்கல்வி நிலையங்களில் நிலவுகின்ற சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய உரிய நடவடிக் கைகளை எடுக்குமாறு பிரதிமாகாண சுகாதாரசேவைகள் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் தனியார் கல்வி நிலையங்களில் சுகாதார நிலைமைகளைப் பேண உரியநடவடிக்கைகள் எடுக்கப்படாததால் அவற்றில் பயிலும் மாணவர்கள் தொற்று நோய்களின் தாக்கத்திற்கு இலக்காகக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

இவற்றைக் கருத்திற் கொண்டு தனியார் கல்வி நிலையங்களில் குடி நீர், மற்றும் மலசலகூட வசதிகள் உட்பட ஏனைய புறச்சுகாதார நிலைமைகளையும் உரியமுறையில் பேணுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு உரிய சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காத கல்வி நிலையங்கள் மீதுநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

## -யாழில். அனுமதியின்றி -

# பனை ,தென்னையைத் தறிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கத்தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சட்ட விரோதமாகப்பனை மற்றும் தென்னை மரங்களைத் தறிப்போர் மீது கடுமையான சட்ட நடவடிக் கைகளை எடுக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் படையினரது கட்டுப் பாட்டில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங் களுள்ளும் அதற்கு வெளியேயும் பனை மற்றும் தென்னை மரங்கள் தறித்தழிக்கப்பட்டு வருகின்றன.

பயன்தரு பனை,தென்னை வளங்கள் அழிக்கப்பட்டு வரு வதால் யாழ் சமூகம் எதிர் கொள்ளும் பின்னடை வுகளைத் தொடரவிடாது தடுப்ப தற்காகவே இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இதன் பிரகாராம் உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி பனை,தென்னை மரங்களைத் தறிப்போர் மீது கிராம சேவை யாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் கடும் சட்ட நடவடிக் கையை எடுக்கவுள்ளனர். (33)

### விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை மற்றும் தெல்லிப்பளை ஆகிய கோட்டக் கல்விப் பிரிவுக்ளுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணபங்கள் கோரப் பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக வலயம் அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 1ஐப் பூர்த்தி செய் தவர்கள் இப்பதவிக்கு விண்ணப் பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக விண்ணப் பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குமுன்னர் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப் பங்களை வலிகாமக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக் குமாறுஅறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# த.பொ.மே. நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். இல் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்).

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்குடாநாடெங்கும் சுற்றுச் சூழல விழிப்புணர்வு மாதம் மிகச் சிறப பான முறையில் கடைப் பிடிக்கப் பட்டது.

மக்கள் மத்தியில் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்து வதுடன் சுற்றுச் சூழல் சமநிலை பேணப்பட வேண்டியதன் அவ சியத்தை வலியுறுத்தும் விதமாகவும் இம் மாதத்தை (ஜுன்) தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுற்றுச் சுழல் மாதா மாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் சுற்றுச் சூழலின் பாதுகாப்புத் தொடர்பாக யாழ்குடாநாட்டு மக்களுக்கு விழிப் புணர்வுகளை ஏற்படுத்தும் விதமாக துண்டுப் பிரசுரங்கள், கருத்தரங் குகள் என்பன வாயிலாக சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப் புணர்வுகள் ஏற்படுத்தப்படுவதுடன் சூழலைப்பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. (33)

# இளவாலையில் களவாடப்பட்ட பொருட்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் -இளவாலையில் பிரதான வீதிகளுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் களவு போனதையடுத்து அந்த வீட்டின் உரிமை யாளர் கலாசாரத்தைப் பேணும் குழுவிடம் முறைப்பாடு செய்தார். இதைத் தொடர்ந்து திருடனைத் தேடிப்பிடித்த கலாசாரத்தைப் பேணும் குழுவினர் திருடனிடம் இருந்து களவாடப்பட்ட பொருட்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

# காரைநகர் - கசூரினா கடற்கரையில் இருகுழுக்களிடையே மோதல்

(காரைநகர்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1.00மணியளவில் காரைநகர் கசூரினா கடற்கரையில் சுற்றுலா மற்றும் பொழுது போக்கிற்காக வந்த் இருவேறு குழுக்களிடையில் கைகலப்பு இடம்பெற்றது.

இந்த இரு குழுக்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனஅங்கிருந்தோர் கூறினர். இதனைக்கண்ட இராணுவத் தினரும்,பொலிசாரும் அந்த மோதலை அடக்க முற்பட்டனர். ஆனாலும் அது சிறிதுநேரம் நீடித்தது. இதுதொடர்பாக அந்த ஊர்மக்களைக் கேட்டபோது இவ் வாறான மோதல்கள் இதற்கு முதலும் நடைபெற்றன. இது எமது யாழ்ப்பாண இளைஞர்களுக்கு ஓர் பொழுதுபோக்கு இடமாக மட்டு மல்லாமல் மது அருந்திவிட்டு கை கலப்பு நடைபெறும் இடமாகவும் மாறிவிட்டது. இது காலப்போக்கில் எவ்வாறு மாற்றமடையுமோ என அச்சம் தெரிவித்தனர்.

## -சமுர்த்தி அதிகார சபையினால்-

# ஊர்காவற்றுறை மீனவருக்கு தொழில் உபகரணம் அன்பளிப்பு

சமுர்த்தி அதிகாரசபையின் கால்நடை -சுயதொழில் அபிவிருத் தித் திட்டத்தின் கீழ் ஊர்காவற்று றையில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்த அனர்த் தங்களால் பாதிக்கப்பட்ட ஊர் காவற்றுறை பிரதேச மீனவர்களின் தொழில் முயற்சிகளை மேம் படுத்து வதற்காக வே.இவ் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள் ளன.

இதனடிப்படையில் மேற்படி பிர தேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 5பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஒவ் வொன் றும் தலா7500 ரூபாய் பெறுமதியான கடற் றொழில் உப கரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (33)

# ஈ.பி.டி.பி உறுப்பினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில்

யாழ்.தீவகம் ஊர்காவற்று றையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட 15வயதுடைய சிறுமி ஒருவர் 7மாதக் கர்ப் பிணி யான நிலையில் யாழ். மருத்துவ மனையில் அனுமதிக் கப்பட் டுள்ளார்.

இந்தச் சிறுமிக்கும் இவரது தாயாருக்கும்இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டதையடுத்து இச் சிறுமி மண்ணெய் அருந்தியுள்ளார். இதனையடுத்து ஊர்காவற்றுறை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்ட இச்சிறுமியை உடற் பரிசோதனைக்கு உற்படுத்திய மருத்துவர், சிறுமி 7மாத கர்ப் பிணியாக இருப்பதைக் கண்டறிந் துள்ளார். பின்னர் மேலதிக சிகிச் சைக்காக இச்சிறுமி-யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். தற்கொலை முயற்சி பற்றிய விசாரணையை சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்ட போதே இச்சிறுமி தான் ஈ.பி.டி.பி உறுப் பினர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக் கப்பட்ட தைத் தெரிவித்துள்ளார். நெடுந் தீவிலிருந்து தாங்கள் இடம் பெயர்ந்து ஊர்காவற்றுறையில் உள்ள ஈ.பி.டி.பி முகாமுக்கு அருகில் உள்ள வீட்டில் தங்கி வசித்த போது, தங்கள் வீட்டில் தான் தனியாக இருந்தபோது குறிப்பிட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் தன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக இச்சிறுமி தெரிவித்துள்ளார். விக்னேஸ்வரன் என்ற இந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் தற்போது ஊர்காவற்றுறையில் இல்லையென்றும் இவர் யாழ்நகரிலுள்ள ஈ.பி.டி.பி முகாமில் இருப்பதாகவும் இச்சிறுமி கூறியுள்ளார்.

# சர்.தமிழீழ மாணவர் பேரவையின் சமகால அரசியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்பட்டு வரும் சமகால அரசியற் கருத்தரங்கின் 10ஆவதுதொடர்கடந்த ஞாயிற்றுக் கிழமை மானிப்பாயின் பிர தேசசபை மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

மானிப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சச்சிதானந்தம் தலைமையில் இடம் பெற்ற இக்கருத்தரங்கில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி உட்பட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் உறுப்பினர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என 500இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் "தமிழர் பண்பாட்டின் இன்றைய செல்நெறி" என்ற தலைப்பிலான கருத்துரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார். (33)

## கூட்டம்

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை கல்லூரி மண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ,பழைய மாணவர்சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ள இக் கூட்டத்திற்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் சகலரையும் கலந்து [illegible]காள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (33)

# யாழ்.இல் தேவைப்படும் தொழிற்பயிற்சிபற்றி ஆய்வு

யாழ்.மாவட்டத்தில் "சப்னா" எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தினரால் தொழிற்பயிற்சிகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு தொழில்நுட்ப பயிற்சிகள் அவசியம் என்பதைக் கண்டறிவதற்காகவே இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும் தேவைகளின் பிரகாரம் யாழ். மாவட்ட இளையவர்களுக்கான புதிய தொழில்நுட்ப பயிற்சிகள்வழங்கப்படும் எனத தெரியவருகிறது. (33)

# அடிப்படை வசதியின்றி இயங்கும் வல்வெட்டித்துறைத் தபாலகம்

யாழ். வடமராட்சியில் உள்ள வல்வை தபாலகம் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையிலேயே இயங்கிவருகின்றது.

நிரந்தரக்கட்டடம் ஒன்று இல்லாத நிலையில் நீண்டகாலமாகத் தனியார் வீடொன்றிலேயே இத்தபாலகம் இயங்கி வருகின்றது. இதனால் இங்குதபாலகத்தின் செயற்பாடுகளுக்கு ஏற்ற இடவசதிகளும் ஏனைய அடிப்படை வசதிகளும் காணப்படவில்லை.

இதன்காரணமாக மேற்படி தபாலகத்தின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்களும் தமது தபால் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாத [illegible] காணப்படுகின்றது. (33)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# "ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்"

என் அன்பு வாசகர்களே!

என் முதலாவது பகுதியைப் படித்தீர்கள் நிறைய விமர்சனங்கள் வந்தன. நன்றி.

நிர்ப்பந்தமான அறிமுகம் பற்றி எனது உதாரணங்கள் ஊடாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். இனி நாம் அறிமுகம் பற்றிய சர்ச்சையிலிருந்து சற்று வேறுதிசை நோக்கிப் போவோம். ஒருவனின் அனுபவங்கள், அவன் பற்றிய சுயாதீன 'அறிமுகம்' ஆகலாமில்லையா? சுயாதீன அறிமுகம் என்பது எந்தவித நிர்ப்பந்தமும் இல்லாது 'அறிமுகம்' செய்து கொள்வது! ஒருவரைப் பார்த்தவுடன் அவரது இயல்பில் மையல் கொள்வது.



நீங்கள் யாரையாவது பார்த்தவுடன் அவர்பால் ஈர்க்கப்பட்டு அவர் எனக்கு 'அறிமுகம்' ஆனால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று உணர்ந்ததில்லையா?

பல்லாயிரக்கணக்கான நண்பர்கள் இந்த உலகில் எவ்வாறு அறிமுகமாகிறார்கள் என நீங்கள் நினைத்துப் பார்த்ததில்லையா? சுயாதீன 'அறிமுகம்' அங்குதான் ஏற்படுகிறது. எதிர்பார்ப்பில்லாமல்.. திடீரென... ஒரு மின்னல்! மின்னலின் ஒளியில் ஒரு 'அறிமுகம்' சாத்தியமாகிறது.

ஈழநாதம் வாசகர்களுக்கு இரண்டு புகைப்படங்களைத் தருகிறேன். முதலாவது புகைப்படத்தில் நீங்கள் நன்கறிந்த ஒரு கதாநாயகன் இருக்கிறார். அவருக்கு அருகில் இருப்பது நான்தான். இரண்டாவது புகைப்படத்திலும் உங்களுக்கு அறிமுகமான சிலர் இருக்கிறார்கள். பிரபல்யம் ஆனவர்கள்தான். பிரபல்யமானவர்களுடன் அறிமுகம் கொண்ட வகையில் என்னை நான் 'அறிமுகம்' செய்துகொள்ளலாமா? உண்மையில் என்னை அறிமுகப் படுத்துவதற்கு பிரபல்யமானவர்களைத் துணைக்கழைப்பது... போலியான 'அறிமுகம்' ஆகாதா? அதனைச் சுயாதீன 'அறிமுகம்' என்று சொல்லலாமா?

எது எப்படி இருப்பினும், எனது அனுபவங்களுக்கூடாக என்னை நீங்கள் அறிவதுதான் சுயாதீன 'அறிமுகம்'.

'வண்ணஜாலம்' என்றொரு தென்னிந்திய 'கோலிவுட்' திரைப்படம். 'கோலிவுட்' என்றால் என்ன தெரியுமா?

அமெரிக்காவில் LOSE ANGELS என்ற இடத்தில் (சுருக்கமாக LA என்பார்கள்) அமைந்துள்ள சினிமா நகரம் HOLLYWOOD. HOLLYWOOD தான் சினிமா உலகின் இராஜதானி. பலகோடி... கோடானுகோடிப் பணத்தின் உறைவிடம். அண்மையில் இறந்த முன்னாள் அமெரிக்க சனாதிபதி Regan கூட ஒரு Hollywood நடிகர்தான். நிறையத் திரைப்படங்களை உற்பத்தி செய்யு நகரமாய் அது இன்றும் விளங்குகிறது.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் இப்பொழுது MOMBAY எனப் பெயர் மாற்றப்பட்டுள்ள முந்தைய BOMBAY நிறையத் திரைப்படங்களை உற்பத்திசெய்யும் ஒரு சினிமா நகரமாய் விளங்கியது. அதனை அக்காலத்தில் BOLLYWOOD என்று அழைத்தார்கள். பின்னர் MOLLYWOOD என்று பெயர் மாறலாயிற்று. வட இந்தியக்கதை இவ்வாறிருக்க, தென்னிந்தியாவில் திரைப்பட நகரமாய் கோடம்பாக்கம் விளங்கியது. ஆகவே அதனை KOLLY WOOD என அழைக்கிறார்கள்.

இத்தகைய 'கோலிவுட்' படங்களில் ஒன்றான 'வண்ணஜாலம்' படப்பிடிப்பின்போது எடுத்த புகைப் படங்களைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள். இந்தத் திரைப் படத்தின் மூன்றில் ஒருபகுதி இலங்கையில் படமாக்கப்பட்டது.

இலங்கையின் எழில்கொஞ்சும் மலையகத்தில் இந்தப்படப் பிடிப்புகள் நிகழ்ந்தன. பெரும பாலான படப்பிடிப்பு நுவரெலியா மாவட்டத்தில் நடந்தது.

அதுசரி....., இதற்கும் எனக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா? சொல்கின்றேன். நடிகர் நாசர் என் அன்புத்தோழர், அவர் ஒரு நல்ல கலைஞர், கிராமியக்கலைகளிலும் தெருவெளி நாடகங்களிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். மணிக்கணக்காக நானும் அவரும் தமிழர் கலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம்.

ஒருநாள் Mrs. Nazer இடமிருந்து என் கைத்தொலைபேசிக்கு ஒரு அழைப்பு (Mrs.Nazer ஐப் பற்றியும் இங்கு சொல்லவேண்டும். அவர் பெயர் கமீலா. மிகவும் அற்புதமான ஆளுமை கொண்ட பெண்மணி)

"உங்க Friend Nazer இலங்கை போகிறார். நீங்கள் இப்ப எந்த Countryலை இருக்கீங்க" கமீலா கேட்டார்.

நான் இலங்கை வந்து 6 நாட்களாகியிருந்தன அப்போது,

"I am in Srilanka. I just arrived"

**பகுதி-02**

என்றேன் நான்.

"Please go and see Him. He looks Forward to see You'' என்றார்.

நீண்ட நாட்களின் பின் என் நண்பனைச் சந்திக்கும் ஆவலில் எல்லா விபரங்களையும் கமீலாவிடம் பெற்றுக்கொண்டு... நண்பர் நாசரைச் சந்திக்க நுவரெலியா பயணமானேன்.

22 வருடங்களின் பின்னர் மலையகத்தில் மீண்டும் நான் கால் பதித்தேன். கண்டி மாநகரமும் பேராதனைப் பல்கலைக்கழகமும் அப்பாடா....

'அது ஒரு அழகிய நிலாக் காலம்' ! இலங்கையின் மிக நீளமான நதியாகிய மகாவலி கங்கையின் எழிலைப் பல கதாசிரியர்கள் வர்ணித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள் வளைவுகளும்.... மூங்கில் புதர்களும் நுரை கக்கும் சிற்றலைகளுமாய்.... அந்தப் பேரழகி இன்றும் இளமையாய்த்தான் ஓடிக் கொண்டிருக்கிறாள்.

22 வருடங்களாய் நான் பாவித்திராத ஒரு மொழி 'சிங்களம்' என்னால் முன்னர் மிக இலகுவாக பாவிக்கப்பட்ட மொழி அது. காதில் புதுமொழிபோல் ரீங்காரமிட்டது.

''மாத்தையா கொகெத பைணவா''? Aircondition bus கண்காணிப்பாளனின் குரல்கேட்டுக் கனவிலிருந்து விழித்தேன். "ரம்பொட Water talls" என்றேன் 10 நிமிட ஓட்டத்தின் பின்னர் 'பஸ்' நின்றது. இறங்கிக்கொண்டேன்.

பெரிய ஆஞ்சநேயர் கோவிலும், பெரிய ஒரு Five Star Hotel உம் ரம்பொடவில் நிமிர்ந்து நின்றன.

முன்பொரு தடவை நான் Pera Campus இல் படிக்கும் பொழுது ரம்பொட வந்திருக்கிறேன். ஒரு ரீக்கடை தேடி நானும், நண்பர்களும் 12 கிலோ மீற்றர் மலையடிவாரத்தில் நடந்தது நினைவு வந்தது.

Hotel இன் முன்னே சிறிய கூட்டம் இருந்தது. நடுவே ஒரு பெண் தன் செயற்கைச்சிரிப்புகளால் கூட்டத்தை மகிழ்வித்துக் கொண்டிருந்தாள். கிட்ட நெருங்கிச் சென்றேன். அருகிலிருந்த ஒருவரிடம் 'யாரிவள்?' என்று கேட்டேன்.

"குட்டிராதிகா"

எனப் பதில் வந்தது.

சரி எப்படியோ ஒருவாறு என் நண்பனைச் சந்தித்து படப்பிடிப்பிலும் கலந்து கொண்டேன். இங்கே நான் பெற்ற அனுபவம் கவலைக்கிடமானது.

தமிழ் நாட்டில் தான் நடிகர்களைத் தெய்வமாகப் பூஜிக்கிறார்கள் என்றால் இங்குமா? மலையக தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் அடிமை நிலையில் வாழ்பவர்கள் வீட்டு வசதிகள் இல்லாதவர்கள். எஸ்டேட்டில் சினிமா நடிகர்களைப் பார்ப்பதற்காக தமது கூலி வேலைகளையும் விட்டு விட்டு Hotel இன் முன் தவங்கிடந்தார்கள். இரவு பகலாக சிலர் பனியிலும், மழையிலும் அங்கேயே தூங்கினார்கள்.



தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் ஒரு நாள் கூலி 100-160/= வரைதான். அந்தக் கூலியையும் துறந்து எங்கோ பிறந்து ஒரு படத்திற்கு 50 இலட்சம் வாங்கும் ஒரு நடிகனை அல்லது 10 இலட்சத்திற்காக தனது அங்கங்களைக் காட்டும் ஒரு நடிகையைப் பார்ப்பதற்காக தமது உணவைத் துறந்து, தமது வாழ்நிலையைத் துறந்து, பாடசாலைக் குச் செல்லாமல் மழையிலும், பனியிலும் காத்துக் கிடந்தார்களே அந்த ஏழைத் தொழிலாளர்கள்; இதனை நினைக்க நினைக்க மனசுக்குள் கவலையாக இருந்தது.

Hotel இல் ஒரு நடிகருக்கு ஒருநாள் வாடகை உணவு இல்லாமல் 3500/=. இந்தத் தொழிலாளரின் ஒருநாள் சம்பளம்130/= ஏன் இப்படி எமது சமூகம் சீரழிகிறது? ஏன் இந்தச் சினிமா மோகம் இப்படி ஆட்டுகிறது? நடிகர்கள், கலைஞர்கள். அது அவர்களது தொழில். அவர்கள் தெய்வங்கள் அல்ல.

இன்னுமொரு விடயத்தையும் சொல்ல வேண்டும். இந்தப்படத்திற்காக ஒரு 'Out house' Set போட்டார்கள். பார்த்துக் கொண்டிருக்க ஒரே நாளில் ஸ்ரீரு வீடு கட்டப்பட்டது. இதையெல்லாம் இந்தத் தொழிலாளர்கள் ஆ...வென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். 80 சதுர அடிகள் கொண்ட அழகிய 'செற்' உருவாகியது. தொழிலாளர்களின் இருப்பிடமான 'Lines' லயன் என்று சொல்வார்கள். அது 10 அடிசதுர அறை அதற்குள் தான் சமையல்,படுக்கை எல்லாம். அவர்களுக்கு ஒரே நாளில் தேயிலைத் தோட்டத்தின் நடுவில் 80 சதுர அடி வீடு கட்டப்பட்டது. அதிசயமாகத் தானே இருக்கும். ஆசையுடன் அந்த வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள்.

அடுத்த நாள் படத்தின் உச்சக் கட்டக் காட்சி படமாக்கப்பட்டது. ஏராளமான தொழிலாளர்கள் தமது வேலைகளை விட்டு விட்டு உணவையும் துறந்து படப்பிடிப்பைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். உச்சக்கட்டக் காட்சியில் அந்த 80 சதுர அடி அழகிய வீடு தீப்பிடித்து எரிவது போல் காட்சி. அந்த வீட்டை உண்மையில் எரித்தார்கள்.

ஒரு நாளில் ஒரு வீடு கட்டி மறு நாளே அதை எரித்தார்கள். 50 வருடமாக 8அடி சதுரத்தில் வாழும் ஏழைத் தோட்டத் தொழிலாளர்கள் அதையும் பார்த்து ரசித்தார்கள். என் மனதில் அந்தத் தொழிலாளர்களின் அறியாமையும் அவர்களது சினிமா மோகமும் இப்பொழுது நினைத்தாலும் புரியாத புதிரே......

(மீண்டும் அடுத்த வாரம்)

---

# பேருந்து நிலையத்தை மாற்ற வேண்டுகோள்

(மல்லாவி)

மல்லாவி நகரப்பகுதியில் இயங்கிவரும் பேருந்து நிலையம் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி உள்ளது.

இப்பேருந்து நிலையம் தனியாருக்கு சொந்தமான காணியில் இயங்கி வருவதால் அடிப்படை வசதிகளின்றிப் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. இதனால் ஏனைய பேருந்து நிலையங்களுடன் ஒப்பிடும் போது மேற்படி நகரப்பகுதியில் உள்ள பேருந்து நிலையம் மிகவும் சீரற்ற நிலையிலேயே இருந்து வருகின்றது.

தனியாருக்குச் சொந்தமான காணியில் இருந்து வருவதனால் பேருந்து நிலையத்தைப் புனரமைக்க முடியாமலும் உள்ளது. அடிப்படை வசதிகளான மலசல கூட வசதி குடிநீர் வசதி மற்றும், பயணிகள் தங்குமிட வசதி என்பன இல்லாமையினால் இப் பேருந்து நிலையத்தை வேறு ஓர் இடத்திற்கு மாற்றச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென மக்கள் கேட்கின்றனர். (24)

# பூநகரி ஞானிமடம் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்பு!

## -மேலும் இருக்கலாம் எனச் சந்தேகம்

(பூநகரி)

பூநகரி நாகதேவன்துறை வீதியில் ஞானிமடம் பாடசாலைக்கு எதிராகவுள்ள சதாசிவம் முத்துவேலு என்பவருடைய வீட்டிற்குப் பின்புறமாகவுள்ள சபாரத்தினம் என்பவருடைய காணியைக் கடந்த வெள்ளியன்று உழுதபோது, இருஉரப்பைகளில் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதற்குப் பக்கத்தில் சிவப்பு நிறத்தில் பூக்கீறப்பட்ட பாவாடையும் இருக்கக் காணப்பட்டது. இதற்கு அண்மையில் கிணறு ஒன்றும் முற்றாக மூடப்பட்டுள்ளது. இதிலும் எலும்புக்கூடுகள் இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வெலும்புக்கூடுகள் பூநகரியில் வலம்புரி இராணுவ நடவடிக்கையால் நாகதேவன் துறையில் இருந்த கடற்படையினர் கிளாலிக் கடலில் கைதுசெய்த பெண்களின் எலும்புக் கூடுகளாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. இராணுவம் விட்டுச் சென்ற பின்னர் முத்துவேலு என்பவருடைய வீட்டில் பெண்களின் உடுப்புகள் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (34)

## கடந்த வாரத்தில்... 14.06.2004-20.06.2004

**14**

"போரிடும் வல்லமை சேர்ப்போம்" இறுவெட்டு வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



வெளியீட்டு நிகழ்வில் சிறப்பிப்பு

கிளிநொச்சி நகரப் பகுதியினை அண்மித்த பகுதிகளுக்கு தினமும் பகல் 8.30 மணிமுதல், நண்பகல் 12.30 மணிவரையும் ,பிற்பகல் 6.00 மணி முதல் இரவு 10.30 மணிவரையும் மின்சாரம் வழங்கல் ஆரம்பம்.

**15**

மன்னார் நகரப்பகுதியில் வைத்து இரு பெண்போராளிகளைச் சோதனையிட முயன்றமை, பொதுமக்கள் சிறிலங்காப் படையினரால் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களைக் கண்டித்து மன்னாரில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு மனிதாபிமானமாகப் பணிபுரிகின்ற 24 இற்கும் அதிகமான அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து தாயகப் பிரதேசத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற ஐ.நா. அமைப்புக்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து, இங்குள்ள மக்களின் உள்ளூர் ஸ்தாபன்ங்களுடன் இணைந்து மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்தனர்.



வேலைத்திட்ட ஆராய்வு

**16**

சமாதானத்திற்கு எதிராகவும், தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவும், பிரதேசவாதத் தைத் தூண்டும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரச்சாரத்திற்கு அரசவானொலிகள் உதவுவதால் அதனைத்தடுக்க வேண்டுமென நோர்வே தூதுவருடன் நடைபெற்ற சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.




தூதுவரிடம் வலியுறுத்து

**17**

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகள், வாழ்வுரிமைக் கோரிக்கைகளை வலியுறுத்தியும், தமிழ் மக்கள் மீதான வன்முறைத் திணிப்புக்களைக்கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.



ஆர்ப்பாட்டப் பேரணியில்




14.06.2004-20.06.2004

**18.**

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் கெப்ரி அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் பலப்படுவது குறித்துக் கலந்துரையாடினார்.

சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஐ.நா.உணவுத்திட்டத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**20.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாதாந்த வெளியீடான தேதுன்ன என்ற சிங்கள இதழில் வெளிவந்த "மௌனித்திருந்தவர் மனக்குரல், வன்னியில் இருந்து ஓர்மடல்- கடிதத்தொகுப்பு" ஆகிய இரு நூல்கள் வவுனியாவில் வெளியிடப்பட்டன.



வெளியீட்டு விழாவில்

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு இடங்களில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.



சர்வதேச அகதிகள் தினத்தில்

மல்வத்த பீடத்தின்26ஆவது மகாநாயக்கராக, அனுநாயக்கர் குருநாகல் ஸ்ரீ மகா விகாரையின் பிரதம குருவான வண. திபுகுவாவே ஸ்ரீசித்தானந்த தேரர் நியமிக்கப்பட்டார்.

## உடத்தலவின்ன படுகொலையை விசாரிக்கும் தலைமை நீதிபதியை நீக்க நீதிமன்றில் மனு

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் குழுவின் தலைமை நீதியரசரை விசாரணையில் இருந்து நீக்கக் கோரும் மேன் முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதி முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆவார். இவர் சார்பாக ஆஜரான சட் டத்தரணிகள் உயர் நீதிமன்றத்திற்கான மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

தலைமை நீதியரசர் எல்பட நாயக்க வழக்கை விசாரித்த விதம் தமது தரப்பிற்குப் பாதிப்பு ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதென்பதே இந்தச் சட்டத்தரணிகளின் வாதமாகும். இதேவேளை கடந்த வாரம் வழக்கை விசாரணைக்கு எடுத்த போது தலைமை நீதியரசரை நீக்குமாறு விடுத்த கோரிக்கையை மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட குழு நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

## தேசிய ஐக்கிய முன்னணிக்கு எதிரான முஸ்லிம் காங்கிரசின் வழக்கு தள்ளுபடி

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணிக்கு(நு.ஆ) எதிராகத் தாக்கல் செய்த வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்துள்ளது. இந்த வழக்கு தேசிய ஐக்கிய முன்னணிக்கு இடைக்கால தடைஉத்தரவு விதிக்க வேண்டும் எனக் கோரி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த இடைக்கால தடை உத்தரவு வழக்குப்பின்னர் வாபஸ் பெறப்பட்டாலும் எதுவித முன்னேற்றமும் இன்றி விசாரணைகள் தொடர்ந்தன. இதேவேளை வழக்கு இப்பொழுது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளமையால் தேசிய ஐக்கிய முன்னணியின் செயற்பாடுகளை எந்தவித இடையூறுகளும் இன்றி முன்னெடுத்துச் செல்ல முடியும் என அதன் பேச்சாளர் அபுல்கலாம் செய்தி ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

## தனியார்துறை ஊடகவியலாளர்கள் சிலரை அரச ஊடகங்களுக்குள் உள்வாங்க முயற்சி

(கொழும்பு)

கொழும்பில் உள்ள சில தனியார்துறை ஊடகவியலாளர்களை கையூட்டுக் கொடுத்து அரச சார்பு ஊடகங்களுக்குள் உள்வாங்குவதற்கு சிறிலங்கா அரசின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர முயல்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கைக்காக இவர் தன்து அமைச்சில் புதிதாக உருவாக்கியிருக்கும் பொதுசன தொடர்புகள் பிரிவிற்கு உத்தரவிட் டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

தனியார் ஊடகவியலாளர்களை தனது அமைச்சின் கீழ் உள்ள ஊடகங்களுக்குள் உள்வாங்குவதற்காக சில சலுகைகளை இவர் அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## 114 பா.உ.களின் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் மகஜர் கையளிப்பு

பாராளுமன்றத்தில் சனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று கோரி 114 எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம நேற்று முன்தினம் மகஜர் ஒன் றைக் கையளித்தனர். இந்த நிகழ்வு பிற்பகல் 2.30 இற்கு பாராளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்றது. இந்த மகஜரில் மேலும் இருவர் எதிர் வரும் 20 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது கையெழுத்திடுவர் என ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற அமைப்பாளர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். இதன் பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களான கரு ஜயசூரிய, பி.சந்திரசேகரன் ஈழவேந்தன். எம்.எஸ் செல்லசாமி, அத்துரலியே ரத்னதேரர், ரவூப்ஹக்கீம் ஆகியோர் பங்கேற்றனர்.

தாம் அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதற்காக இந்த முன்னெடுப்பை மேற்கொள்ளவில்லை என்றும், பாராளுமன்ற சனநாயகத்தை நிலைநாட்டுவதற்கே இந்த முனைப்பை மேற்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (32)

## பௌத்த பிக்குகள் மீதான தாக்குதலில் சனாதிபதி சந்திரிகாவுக்கும் பங்கு!

### எதிர்க்கட்சித்தலைவர் ரணில் சந்தேகம்

(கொழும்பு)

பௌத்த பிக்குமாரைப் பாராளுமன்றத்தில் வைத்துத் தாக்கியதில் சனாதிபதிக்கும் பங்கு இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாக எதிர்க் கட் சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மாத்தளைப் பகுதியில் மாகாணசபை வேட்பாளர் களைச் சந்தித்தபோது அவர் அதனைத் தெரிவித்தார்.

சனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது, பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டதற்கு மன்னிப்புக் கோரவில்லை. இதுவே இவ்வாறு எண்ணக் காரணம் என அவர் மேலும தெரிவித்தார்.

தாக்கப்பட்ட பெ பிக் வான கொலன்னாவ சுமங்கலவை வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய போது ஆயுதத்தால் தாக்கிய அடையாளங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது அரசாங்கத் தரப்பால் திட்டமிடப்பட்ட ஒரு செயல் எனவும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். (32)

## எதிர்க் கட்சிகள் கேட்டிருந்தால் நானும் கையொப்பமிட்டிருப்பேன்

### -விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழுப்பு)

எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் சனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவே சபாநாயகரிடம் மகஜரைக் கையளித்துள்ளன. எனவே தம்மிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தால் அதில் தமது கட்சியும் கையொப்பமிட்டிருக்கும் என ஜே.வி.பி. யின் பிரச்சார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறார். அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்தைக் கொண்டு எதிர்க்கட்சிகள் செயற்படாமையால் அதில் தாமும் கையெழுத்து இடுவதில் ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்தார். (32)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

## மூன்றாம் நாள்

### கண்ணிவெடி விழிப்புணர்வுப் பயிற்சியின் மூலம் அடையப்பெற்ற முன்னேற்றம் :-

| வருடம் | விபத்துக்களின் எண்ணிக்கை | பாதிப்படைந்தோர் எண்ணிக்கை | பாதிப்பு வகை | | மரணம் |
|---|---|---|---|---|---|
| | | | கண்ணிவெடி | வெடிபொருள் | |
| 2000 | 119 | 131 | 73 | 58 | 15 |
| 2001 | 37 | 51 | 28 | 23 | 03 |
| 2002 | 23 | 32 | 15 | 17 | 07 |
| 2003 | 15 | 17 | 06 | 11 | 0 |
| 2004 | 02 | 05 | 03 | 02 | 04 |
| தொகை | 196 | 236 | 125 | 111 | 29 |

**வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகம் அமைந்துள்ள இடங்கள்**

| மாவட்டம் | இடம் |
|---|---|
| கிளிநொச்சி | கிளிநொச்சி |
| | பூநகரி |
| | பளை |
| முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | மாங்குளம் |
| | பனங்காமம் |
| வவுனியா | நெடுங்கேணி |
| | கனகராயன்குளம் |
| மன்னார் | ஆண்டான்குளம் |
| யாழ்ப்பாணம் | தாளையடி |

மென்மேலும் முன்னேற்றம் நிச்சயம் தேவை.
மக்கள் விழிப்புணர்வினைப் பூரணமாக உணர்ந்தால் மட்டுமே விபத்துக்களை இல்லாதொழிக்க முடியும்.

***விழிப்புடன் இருப்போம்; விபத்தினைத் தடுப்போம்*** யுனிசெவ் வெண்புறா-வன்னி

(சி.9732)



# தவறிவிட்டது

செல்லப்பா இராமச்சந்திரன் K.S.R புகைப்பட நிலையம் டிப்போவீதி, கனகபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த எனது மூக்குக்கண்ணாடி 15.06.2004 இரவு டிப்போவீதியிலிருந்து திருநகர் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிபிட்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
செ.இராமச்சந்திரன்.

(4735)

# மனிதவள மேம்பாட்டுப் பகுதி

## கணக்கியல், கணக்காய்வுப் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்,பெண் இருபாலாரும் கணக்கியல், கணக்காய்வுப் பயிற்சி நெறிகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

1. கல்வித்தகைமை :- க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணித பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. அகவை :- 16தொடக்கம் 21 வரை

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 05.07.2004
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் :- 07.07.2004 அன்று காலை 9.00 மணி
03. நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :- மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்களோடு வருக.
05. பயிற்சிக்காலத்தில் தங்குமிடம், கல்விச்செலவு, உணவு வசதி இலவசமாக வழங்கப்படும்.
06. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
    பொறுப்பாளர்,
    மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
    நிதித்துறை,
    நாகதம்பிரான்வீதி, கிளிநொச்சி.
07. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி.

(சி-9735)

# ஓராண்டு நினைவு அஞ்சலி



## திரு. வேலுப்பிள்ளை இராசையா

பிறப்பு 25-05-1955

இறப்பு 05-07-2003

ஆண்டொன்று சென்றாலும் – ஐயா
உம் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது
மாண்டு போனது உன் உடல் மட்டும் தான்
எம் இதயக் கோயிலில் நீங்கள் எம்முடனேயே வாழ்கின்றீர்கள்.
கண்ணிமைக்கும் பொழுதில் காலன்
உந்துருளியில் வந்து உன்னுயிரைப் பறித்தானோ.
காலமெலாம் எம்முடனே வாழ்வீர் என இருந்தோம்.
இடையினிலே காலன் உன்னுயிரை எடுத்தானோ
எம்மிதயக் கோயிலிலே எத்தனை யமன்கள்
வந்தாலும் உன் நினைவை அகற்ற முடியாது.

மனைவி, மகள், மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

(4730)

# இருதரப்பு உறவின் முன்னேற்றம் பற்றி இந்-பாக் வெளியுறவு அமைச்சர்கள் பேச்சு

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட விவகாரத்தில் இந்தியபாகிஸ்தான் ஆகிய இருதரப்பு நாடுகளினதும் உறவுகளின் முன்னேற்றம் பற்றியஅனைத்துப் பரிமாணங்களையும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குஸ்சிட் முகமது கசூரியும் மறுபரிசீலனை செய்துள்ளனர்.

கிழக்கு சீன நகரில் இடம் பெற்ற இச்சந்திப்பு ஆக்கபூர்வமான தென்றும நட்புச் சூழலிலே இது இடம்பெற்றதெனவும் இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் பேச்சுவார்த்தை நடவடிக்கை குறித்தும் இரு தலைவர்களும் பரிசீலனை செய்ததாக வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இதே வேளை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் விடுத்திருக்கும் அழைப்பையடுத்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி விரைவில் பாகிஸ்தானுக்குப் பயணமொன்றை மேற்கொள்வாரென்றும் கசூரி கருத்து வெளியிட்டுள்ளார். நட்வர்சிங்கிற்கும் கசூரிக்கும் இடையே நடைபெற்ற இச்சந்திப்பினை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

# முட்காலணி அணிந்து நடைப்பயணம்

(சென்னை)

காவிரி நீரில் தமிழகத்திற்குரிய பங்கைக் கர்நாடக அரசு தொடர்ந்து திறந்து விட வேண்டுமென வலியு றுத்தி இளைஞர் ஒருவர் நேற்று முன் தினம் முட்காலணி அணிந்து நடைப்பயணத்தை ஆரம்பித்துள்ளார். கடலூரைச் சேர்ந்த அர்ஜீன் இளையராஜா என்பவர் 318 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.அத்துடன் இவர் பெங்களூர் சென்று முதல்வரைச் சந்தித்து தமிழ் நாட்டிற்கு காவிரி நீரினைத் திறந்து விடவேண்டுமெனக் கோரி மனு ஒன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இவ் இளைஞன் இதற்கு முன்னர் பல சாதனைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண் பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள் –

01) கல்வித் தகைமை :- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல்
02) அகவை :- 23 தொடக்கம் 35 வரை.
03) உயரம் :- 05 அடி 05 அங்குலம்.

குறிப்பு:-

01) விண்ணப்ப முடிவு நாள் :- 08 – 07 – 2004
02) அடிப்படை மாத சம்பளம் :- 3600 – 4700
    ................................ +2000.00=5600.00
    10X110
03) விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத் தேர்வு :– 11 – 07 – 2004 ஆகிய நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழகம் பணிமனையில் நடைபெறும்.
04) நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05) விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகாமலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

முகாமையாளர்.
ஆளணி ஆளுகைப் பகுதி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.
நடுவப்பணிமனை. விசுவமடு.

(4734)



# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## காவலர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண் பாலோர் காவலர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள் –

01) கல்வித் தகைமை :- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல்.
02) அகவை :- 23 தொடக்கம் 35 வரை.
03) உயரம் :- 05 அடி 05 அங்குலம்.

குறிப்பு:-

01) விண்ணப்ப முடிவு நாள் 02 – 07 – 2004
02) விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத் தேர்வு 05 – 07 – 2004 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழகம் பணிமனையில் நடைபெறும்.
03) நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04) விண்ணப்பப் படிவங்களை தங்கள் சொந்த எழுத்தில் நிறைவு செய்து அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-


முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(4733)

## யூரோ-2004 கால்பந்துப் போட்டி

# பிரான்ஸ்-இங்கிலாந்து அணிகள் கால் இறுதிக்குத் தகுதி

## முதலாவது போட்டியில் இங்கிலாந்து போத்துக்கலை சந்திக்கும்



போத்துக்கல்லில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கிண்ணத்துக்கான கால்பந்துப்போட்டி தற்போது விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற குழு Bக்கான இறுதி லீக் ஆட்டங்களில் இக் குழுவில் பலமான அணிகளாகக் கருதப்பட்ட இங்கிலாந்து பிரான்ஸ் அணிகள் வெற்றி பெற்று கால் இறுதிக்குத் தகுதி பெற்றன.

இங்கிலாந்து அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் இளம் வீரர் றூனி என்று குறிப்பிட்டார்.


உண்மையில் இளம் வீரர் ஒருவர் சிறப்பான முறையில் போட்டியில் விளையாடியிருந்தமை எங்களுடைய வெற்றிக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. இப்போட்டியில் றூனி 2கோல்களைப் போட்டார்.

இதில் லிஸ்பனில் நடைபெற்ற இங்கிலாந்து குரோசியா அணிகளுக்கிடையிலான பரபரப்பான போட்டியில் இங்கிலாந்து மிக அபாரமாக விளையாடி 4-2 என்ற கோல் எண்ணிக்கையில் குரோசியாவை வீழ்த்தியது இதன் மூலம் Bபிரிவில் இரண்டாம் இடம் பிடித்த இங்கி



லாந்து கால் இறுதிக்குத் தகுதி பெற்றது. இவ் வெற்றிகுறித்து அணித் தலைவர் பெக்கம் தெரிவிக்கையில்,

இந்த வெற்றியை அந்நாட்டு



ரசிகர்கள் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்தனர். குரோசியாவுக்கு எதிரான போட்டியை தொலைக் காட்சி மூலம் கண்டு களித்த ரசிகர்கள் தங்கள் அணிவெற்றி பெற்ற உச்ச மிகுதியால் ஆடிப்பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதே போன்று நேற்று முன்தினம் நடைபெற்ற முற்றுமொரு ஆட்டம் போத்துக்கல்லில் கொய்ம் பறாவில் சுவிற்சர்லாந்து- பிரான்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

இதில் ஏற்கனவே குழு Bயில் முன்னணி வகித்த பிரான்ஸ் அணி சுவிற்சர்லாந்தை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கால் இறுதிக்கு இலகுவாக முன்னேறியது. இருந்தாலும் ஆரம்பத்தில் சுவிற்சர்லாந்து தனது போட்டிப் பலத்தை மிகச் சிறப்பாக நிருபித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் கால் இறுதிப் போட்டிகளில் குழு Aயில் இருந்து கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ள கிரீஸ அணியை எதிர்த்து பிரான்ஸ் அணியும், போத்துக்கல் அணியை எதிர்த்து இங்கிலாந்து அணியும்



மோதுகின்றன.நாளை லிஸ்பனில் நடைபெறும் முதலாவது கால் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி போத்துக்கல்லை எதிர்த்தாடும்

## 7கோல்கள் அடித்து இந்தியா வெற்றி

அமெரிக்காவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது பயிற்சி ஆட்டத்திலும் இந்திய ஆடவர் ஹாக்கி அணி 7-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை நடைபெற்ற முதல் ஆட்டத்திலும் இதேகணக்கில் இந்தியா வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்காக அமெரிக்காவில் பயிற்சி பெற்றுவரும் இந்திய ஹாக்கி குழு அந்நாட்டுடன் 2 பயிற்சி ஆட்டங் களில் பங்கேற்றது. கலிபோர்னியா வில் உள்ள மூர்பார்க் கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் பல்ஜித் சிங் தில்லான், ககன் அஜித்சிங் ஆகியோர் தலா இரண்டு கோல்கள் அடித்தனர். சந்தீப், தாக்கூர், அர்ஜுன்ஹாலப்ப, சந்தீப்சிங் ஆகியோர் தலா ஒருகோல் அடித்தனர். இந்த ஆட்டத்திலும் அமெரிக்க வீரர்களால் கோல்போட முடியவில்லை.

அடுத்ததாக செவ்வாய்க் கிழமை ஆம்ஸ்டர்டாம் செல்கிறது. 26பேரைக் கொண்ட இந்தியக் குழு அங்கு போட்டியை நடத்தும் ஹாலந்துடன் 2பயிற்சி ஆட்டங்களில் (25,27)திகதிகளில் இந்தியா விளையாடுகின்றது. அதனைத் தொடர்ந்து நான்கு நாடுகளுக்கிடையிலான போட்டியில் இந்தியா பங்கேற்கின்றது.

## டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் தகுதியுடன் வோர்ன் சாதனையை இலக்காகக் கருதவில்லை

வரும் ஜுலை முதலாம் திகதி முதல் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள சிறிலங்காவுக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் பங்கேற்கத் தான் முழு உடற் தகுதியுடன் இருப்பதாக ஆஸியின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் தெரிவித்திருக்கிறார்.

இந்த வாய்ப்பு முரளிதரனின் சாதனையை முறியடிக்கும் ஒன்றாகத்தான் கருதவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர் அதனை ஒரு பிரதான இலக்காகவோ சாதனையாகவோ கருதவில்லை என்றும் அப்படியான முறியடிப்பைச் செய்யத் தன்னால் முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

முரளிதரனின் 527 விக்கெட்டுக்களைத் தாண்ட இன்னும் 11 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற வேண்டும் என்று கூறிய வோர்ன், சிறிலங்காவுக்கான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் ஒருசில விக்கெட்டுக்களை வீழ்த்தமுடியும் என்றும் மேற்படி 527 விக்கெட்டுக்களைக் கடந்துவிட்டால் அது பெரும் அதிஷ்டமே என்றார்.

வலது கை சுழல் பந்து வீச்சாளரான வோர்ன் அண்மை இங்கிலாந்தில் கவுண்டி அணிக்கெதிரான போட்டியில் துடுப்பாட்டத்தின்போது இடது கையில் காயப்பட்டார். இதனால் சிறிலங்காவுக்கெதிரான டெஸ்ட் போட்டிகளில் இவரின் பங்கேற்பு அண்மை நாட்களில் நிச்சயமற்ற ஒன்றாக இருக்கும் என்று பேசப்பட்டது. இது தொடர்பாக பத்திரிகையாளர்களின் சந்திப்பின்போது ஷேன்வோர்ன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத் தொடரில் முரளிதரன் பங்கேற்காமை பற்றிப் பத்திரிகையாளர் கேட்டபோது எமது நாட்டுப்பிரதமர் முரளி பந்தை அலட்சியமாக எறிவதாகக் கூறியதையடுத்து முரளி இப்போட்டியில் பங்குபற்றாமல் விட்டார் என்றாலும் அது அவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு என்று கூறியதுடன் அவரின் புறக்கணிப்பு தமது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.




## கிண்ணத்தை கைப்பற்ற பிரான்சுக்கு அதிக வாய்ப்பு இங்கிலாந்தை வீழ்த்துமா போத்துக்கல்

ஐரோப்பியா கிண்ணத்துக்கான கால்பந்து போட்டித் தொடரின் லீக் போட்டிகள் இன்று நடைபெறும்



நெதர்லாந்து லத்வியா ஜேர்மனி- செக்குடியரசு அணிகளுக்கிடையிலான போட்டியுடன் நிறைவடைகின்றது.

இதன்படி கால் இறுதிப்போட்டிக்கு A குழுவில் இருந்து போத்துக்கல் கிரீஸ் அணிகளும் B குழுவில் இருந்து பிரான்ஸ், இங்கிலாந்து அணிகளும் C குழுவில் இருந்து சுவீடன், டென்மார்க் அணிகள் கால் இறுதிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை அதிகளவில் கொண்டுள்ளன. D குழுவில் செக்குடியரசு கால் இறுதி வாய்ப்பை பெற்றுள்ளது மற்றைய அணி நெதர்லாந்தா ஜேர்மனியா என்பதை இன்றைய போட்டி தீர்மானிக்கும்.

இதனிடையே போத்துக்கல் இங்கிலாந்து அணிகள் கலந்து கொள்ளும் முதலாவது கால் இறுதிப் போட்டி நாளை போத்துக்கலின் லிஸ்பன் நகரில் நடைபெறவுள்ளது. இரண்டாவது கால் இறுதிப் போட்டி 27 ஆம் திகதி பிரான்ஸ்- கிரீஸ் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

அதைத்தொடர்ந்துஅரையிறுதிப் போட்டி யூலை மாதம் 30ஆம் திகதியும் இறுதிப்போட்டி யூலை மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு பிரான்சுக்கு அதிகளவு வாய்ப்பு இருந்தாலும் போத்துக்கல் அணி இச்சுற்று போட்டியில் சிறப்பாக விளையாடி வருவது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

வெற்றி வாய்ப்புக்கள் இப்பொழுது போத்துக்கல்லுக்கும் அதிகமாக இருப்பதாகக் கருதப் படுகிறது.

எனவே மிகமிக விறுவிறுப்பான சுற்றுப்போட்டியாக இக்கால்பந்தாட்டப்போட்டி அமையும்என்பது உறுதி

## கிரிக்கெட் மேம்பாட்டு நிகழ்ச்சிக்கு அவுஸ்திரேலியா செல்கிறார் முரளிதரன்



அவுஸ்திரேலியாவுக்கு விளையாடச்செல்லாத இலங்கை வீரர் முத்தையா முரளிதரன், அந் நாட்டில் கிரிக்கெட் விளையாட்டு மேம்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதற்காக அடுத்த மாதத் தொடக்கத்தில் சிட்னி செல்கிறார். அவர் அங்கு அவரது உலக விக்கெட் சாதனைக்குப் போட்டியாகத்திகழும் வார்னேவுடன் இணைந்து கிரிக்கெட் மேம்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் தொடக்கமாக இருவரும் 350 புகைப்படங்களில் சிறப்புக்கையெழுத்திடவுள்ளனர். இருவரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுக்களைக் கடந்தாலும் முரளிதரனே 527 விக்கெட்டுகளுடன் முன்னிலை பெற்றுள்ளார். இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பதற்காக இலங்கை அணி சனிக்கிழமை அவுஸ்திரேலியா சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## மியண்டாட் நீக்கம் ஆச்சரியம் அளிக்கிறது-இன்சமாம்

பாகிஸ்தான் பயிற்றுனர் பதவியிலிருந்து ஜாவித்மியன்டாட் நீக்கப்பட்டது குறித்து ஆச்சரியம் தெரிவித்துள்ளார். அணிக்கப்டன் இன்சமாம் உல்ஹக் அத்துடன் அப்பதவிக்கு தென்னாபிரிக்காவின் பாப்வூல்மரை நியமித்துள்ள கிரிக்கெட் வாரியத்தின் முடிவுக்கு அவநம்பிக்கை தெரிவித்துள்ளார்.


அவர் கோடைகால சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்காவில் இருந்து சனிக்கிழமை இஸ்லாமாபாத் திரும்பிய இன்சமாம் 'தி நியூஸ்' பத்திரிகையில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். மியான்தத் மிகப்பெரிய வீரர், பயிற்சியாளர் பதவியில் மிகவும் கண்டிப்பானவர். அவரது செயற்பாடுகள் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. அவருடன் எனக்கு கருத்து வேறுபாடு ஏதுமில்லை. ஒட்டுமொத்த அணியாகவே செயற்பட்டு நாட்டுக்குமுடிந்தஅளவிலான பெருமையைச் சேர்த்தோம். ஆனால்



வாரியம் மேற்கொண்டுள்ள முடிவு வருத்தம் அளிக்கிறது. என்றாலும் அதற்கு நான் கட்டுப்பட்டுத்தான் தீரவேண்டும். முன்னதாக அணிக்கு வெளிநாட்டுப் பயிற்றுனரை நியமிக்க முடிவு செய்துள்ளதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் பின்னர் போர்டுக்கும், மியன்டாட்டுக்கும் இடையே சுமூக தீர்வு ஏற்பட் டுள்ளது என நம்பிக்கை பெற்றிருந்தேன் எனத் தெரிவித்துள்ளார் இன்சமாம்.

**– விம்பிள்டன் பகிரங்க டெனிஸ் போட்டி ஆரம்பம் –**


## முன்னணி வீரர்கள் பலர் இரண்டாம் சுற்றுக்கு முன்னேற்றம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய மாட்டீனா



டென்னிஸ் போட்டிகளில் புகழ்மிக்கதான விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டிகள் நேற்று முன் தினம் லண்டனில் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் நடப்பு சம்பியன் ரோஜர் பெரடர் வீனஸ் வில்லியம்ஸ் உட்பட முன்னணி வீரர்கள் பலர் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியதுடன் அமெரிக்காவின் 47 வயது நிரம்பிய மாட்டீனா நவரத்தினலோவா ஆகியோர் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினர்.

இந்த போட்டியில் 47 வயதுடைய நவரத்தினலோவா தனது வயதில் ஏறத்தாழ சரிபாதி வயதுடைய கஸ்ரானாவை 6-0,6-1 என்ற நேர்செட்டில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றார்.



**சிந்தனைக்கு**

மொழி,கலை கலாச்சாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்புக்குத் தூண்களாக விளங்குகின்றன. ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன; ஒரு தேசிய நாகரீகத்திற்கு அத்திவாரமாகின்றன.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
23-06-2004

## புதிய கோணத்தில்!

கருணா மட்டக்களப்பில் இருந்து தப்பிச்செல்வதற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர்மௌலானா உதவி புரிந்ததாக வெளியாகியுள்ள தகவல் கருணா விவகாரத்தை மேலும் சில கோணங்களில் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தை/கட்டாயத்தை ஏற்படுதியுள்ளது.

அலிசாஹிர்மௌலானா கருணா தப்பிச்செல்வதற்கு மனிதநேய அடிப்படையிலேயே உதவியதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றல்ல. கருணா அலிசாஹிர் மௌலானாவிற்கு நெருக்கமான நண்பராக இருக்கலாம், ஒன்றாகக் கல்வி கற்றவர்களாகவும் இருக்கலாம். ஆனால் கருணாவோ அன்றி அலிசாஹிர்மௌலானாவோ தனிப்பட்டநபர்கள் என்ற ரீதியில் நோக்கப்படத் தக்கவர்களாகவும் இல்லை. இவர்களின் நடவடிக்கைகள் தனிப்பட்ட நடவடிக்கைகளாகக் கொள்ளத்தக்கவையாகவும் இல்லை.

ஆகையினால் அலிசாஹிர் மௌலானா மனிதாபிமான ரீதியில/ நட்பின் அடிப்படையில் கருணா தப்பிச்செல்வதற்கு உதவியது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அதற்காக அலிசாஹிர் மௌலானாவிற்கு மனிதாபிமானமோ அன்றி நட்போ இருக்கவே கூடாது என்பது அர்த்தமுமல்ல. அலிசாஹிர் மௌலானா கருணாவிற்கு உதவுவதாக இருந்திருந்தால் கருணாவை ஏதாவது ஒரு மனிதநேய அமைப்பிடமோ அன்றி மனித உரிமை அமைப்பிடமோ பாதுகாப்புத்தேட உதவியிருக்கலாம்.

ஆனால் அலிசாஹிர் மௌலானா பொலிசாரின் ஒத்துழைப்புடன் கருணா தப்பிச் செல்ல உதவியமையானது தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிராக அவர் மேற்கொண்ட நடவடிக்கையாகவே நோக்கத்தக்கதாகும். இவரின் இச்செயலினால் இன்று கருணாவின் பெயரில் தமிழ் மக்கள் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் அலிசாஹிர் மௌலானாவின் பங்களிப்பு உண்டு என்றே சொல்லவேண்டும்.

இது குறித்து மேலும் தெளிவாகக் கூறுவதானால் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிராக அதனைப் பலவீனப்படுத்தும் வகையில் அலிசாஹிர் மௌலானா நடந்துகொண்டதாகவே கருதவேண்டியதாகவிருக்கும். ஏனெனில் கருணாவின் தற்போதைய நடவடிக்கையும் கருணாவை சிறிலங்காப் படைத்தரப்பு கையாள முற்படுவதும் இதனையே வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

இது ஒரு புறமிருக்க அலிசாஹிர் மௌலானா இந்நடவடிக்கையை மேற்கொண்டமையானது அவர் சார்ந்துள்ள கட்சியின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வியையும் எழக்கூடியது. அதாவது கருணாவிற்கு அலிசாஹிர் மௌலானா உதவியதில் ஐ.தே.கட்சியின் பங்கு என்ன என்ற கேள்வியும் தவிர்க்க முடியாததாகியுள்ளது.

ஐ.தே.கட்சி அலிசாஹிர் மௌலானாவின் நடவடிக்கை அவரது தனிப்பட்ட நடவடிக்கை என கூறித் தட்டிக்கழிக்க முற்படலாம். ஆனால ஐ.தே.கட்சியின் தலைமையானது விடுதலைப்புலிகளுடன்சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முற்பட்டுக்கொண்டிருந்தது என்பதற்காக தமிழ் மக்களை இராணுவ அரசியல் ரீதியில் பலவீனப்படுத்தும் முயற்சிகளை மூட்டைகட்டி விட்டிருந்தது எனக் கூறுவதற்கில்லை.

பேச்சுவார்த்தைகள் நடந்த காலப்பகுதியில்– எச்சந்தர்ப்பத்திலும் ஆயுதப்படையணியின் நலன்கள் பாதிக்கப்படும் வகையில் ஐ.தே.முன்னணி அரசாங்கம் நடந்துகொண்டதாக இல்லை. ஆயுதப்படையின் நலன்கள் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்ததோடு ஆயுதப்படைத்தரப்பின் நிலைப்பாட்டிற்கு மாறாக எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஐ.தே. முன்னணி அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

இத்தகைய நிலைப்பாடே ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கும்– விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடபெற்றபோதும் முன்னேற்றம் காணமுடியாமற் போனதற்குக் காரணம் எனக் கூறினும் மிகையாகாது. எடுத்துக்காட்டாக பேச்சுவார்த்தை மூலம் உருவாக்கப்பட்ட பாதுகாப்புக்குழு செயலிழந்தமைக்கு அரசாங்கத்தின் இந்நிலைப்பாடே காரணமாகும்.

ஆகையினால் அலிசாஹிர் மௌலானாவின் நடவடிக்கையானது தனிப்பட்ட ரீதியிலானது என ஒதுக்கிவிட முடியாதது மட்டுமல்ல இதில் சிறிலங்காப் படைத்தரப்பினருக்கும் அரசியல் கட்சிகளுக்கும் குறிப்பாக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் எத்தகைய தொடர்பு உள்ளது என்பது ஆராயப்படவேண்டியதுமாகும். ஏனெனில் அலிசாஹிர் மௌலானாவின் நடவடிக்கையானது தமிழ் மக்களின் உரிமைப்போருக்குக்குந்தகம் விளைவிக்கும் வகையில் பாதிப்புக்களை விளைவிக்கத்தக்கதாகும்.

# நோர்வேத் தூதுவர் எனது அமைச்சுக்கு வந்தார் அவரை வெளியே துரத்த முடியவில்லை

**– நோர்வேத் தூதுவருடனான சந்திப்பு குறித்து ஜே. வி. பி அமைச்சர்**

(கொழும்பு)

நோர்வேத் தூதுவர் எனது அமைச்சுக்கு வந்தார் என்னால் அவரை வெளியே துரத்திவிட முடியவில்லை கலந்துரையாடினோம் கலந்துரையாடல் எண்ணெய் வள ஆராய்ச்சிக்கான உதவியை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

இவ்வாறு சிறிலங்காவின் மீன்பிடி கடல்வளங்கள் அமைச்சரும் ஜே.வி.பி உறுப்பினருமான சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நோர்வேத் தூதுவர் ஹான் பிறெஸ்கருடன் இம்மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்புப்பற்றி கருத்து வெளியிட்ட அவர் மேலும்;

"நோர்வே நாட்டின் உதவிகளை ஜே.வி.பி நிபந்தனைகளுடனேயே ஏற்றுக்கொள்கிறது. அழிக்கப்படுகின்ற உதவிகள் நாட்டை எந்த வகையிலும் அச்சுறுத்தாத வகையில் அமையவேண்டும்.

இலங்கை அரசிற்கும் நோர்வே அரசிற்கும் இடையே எண்ணெய் வள ஆய்வு தொடர்கபான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்படி எண்ணெய்வள ஆராய்ச்சிக்காக வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் கடல் முழுமையிலும் ஆய்வு செய்யலாம்.

நோர்வேத்தூதுவருடனான சந்திப்பில் பொதுவான உறவுடன் இந்த அரசாங்கத்தின் புதிய அமைச்சர்களுடன் சந்திப்பு நடத்துவதை நோர்வே ஆரம்பித்துள்ளது என்பதை உணர்ந்து கொண்டேன்" என்றும் தெரிவித்தார்.

# உலகச்சந்தையில் விலை அதிகரிப்பினும் அரசு எண்ணெய் விலையை அதிகரிக்காது

**- அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த**

(கொழும்பு)

உலகசந்தையில் எண்ணெய் விலை அதிகரித்தாலும் அரசாங்கம் எண்ணெய்விலையை அதிகரிக்காததும் அதனால் மாதத்திற்கு ஏற்படும் முப்பது கோடிரூபாய் நட்டத்தை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் மாற்றுநடவடிக்கைகள் எடுக்கும் என அமைச்சர் சுசில்பிறேமஜெயந்த அறிவித்துள்ளார். அரசிற்கு இழப்பு ஏற்பட்டாலுமே மக்கள் மேல சுமையை ஏற்படுத்த மாட்டோம் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேர்முகப்பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் ஆசிய ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும் இணைந்து நடாத்தும் கிளிநொச்சி 155ஆம் கட்டையில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிறுவனத்தில் தையல், தளபாடம் அமைத்தல், உழவுஇயந்திரத் திருததுனர் பயிற்சிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இன்று உழவு இயந்திரம் திருத்தத்திற்கும் நாளை தளபாடம் அமைத் தல் பயிற்சி நெறிக்கும் 25ஆம் திகதி, காலை 9.00மணி தொடக்கம் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என நிர்வாக உதவிப் பணிப்பாளர் செ.மகேந்திரன் அறியத்தருகின்றார். (தீ)

# குற்றவாளிகளை இனங்காணும் தொழில்நுட்பம் அமெரிக்க உதவியுடன் பெறநடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவில் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் குற்றவாளிகளை விரைவில் அடையாளம் காண்பதற்கும் ஏதுவாக அமெரிக்காவின் உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இதன் கீழ் அண்மையில் நீதிஅமைச்சின் செயலாளர் சுதத்கலம்த் அமெரிக்க நீதிமன்றவைத்திய அதிகாரிகள் குழுவினரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். சிறிலங்காவின் குற்றவாளிகளை இனம் காணும் தொழில்நுட்பங்களில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே குற்றவாளிகள் குற்றங்களில் இருந்து தப்பிக் கொள்ளும் அதேநேரம் குற்றங்கள் தொடர்பான வழக்குகளும் பின்தள்ளி வைக்கப்படுகின்றன.

இந்த விடயம் நாட்டின் நீதித்துறையையும் பாரியளவில் பாதிக்கும் என்பதால் உடனடித் தீர்வைக் காணுவதற்கும் நீதிஅமைச்சு முனைப்பை மேற்கொண்டு வருவதாகத் தெரியவிக்கப்படுகின்றது. (32)

# சனாதிபதி மாளிகை விசாரணைப்பிரிவின் பணிப்பாளரின் துப்பாக்கியைக் காணவில்லை

சனாதிபதி மாளிகை விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஏ-விக்கிரம சிங்கவின் கைத்துப்பாக்கி அவரின் காரியாலயத்திலிருந்து களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக குருந்து வத்தை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அங்கு கடமை புரியும் பல ஊழியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும் இதுவரை துப்பாக்கி சம்பந்தமாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. குருந்து வத்தை பொலிசார் மீண்டும் தெரிவித்துள்ளனர்.

# சர்.விமான நிலையங்களின் பாதுகாப்பில் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்

**- அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை**

(கொழும்பு)

சர்வதேச விமானநிலையங்களை தாகக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்கு உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான ஆசிய பிராந்திய சர்வதேச விமான நிலையத்தின் ஒன்றிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிய பிராந்தியத்தின் விமான நிலையப் பாதுகாப்பு என்றதொனிப் பொருளிலேயே இந்த மாநாடு நடைபெற்றுள்ளது.

விமான நிலையத்தின் பாதுகாப்பு அதன் வசதிகளை அதிகரிப்பது சம்பந்தமாக இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்பபட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றும் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய பிராந்திய சர்வதேச விமான நிலைய ஒன்றியமும் விமான நிலைய சிவில் விமான சேவை நிறுவனமும் இணைந்து இந்த மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளன.

# தப்பி ஓடிய இராணுவச் சிப்பாயிடமிருந்து பேனாவடிவிலான கைத்துப்பாக்கி மீட்பு

சிறிலங்காப் படைத்துறையில் இருந்து தப்பியோடிய ஒருவரிடம் இருந்து அதிநவீன பேனா வடிவிலான கைத்துப்பாக்கி ஒன்றினை சிறிலங்காப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இக்கைத்துப்பாக்கி 2.2 ரகத்தைச்சேர்ந்ததென, புத்தளம் பொலிசார் தெரிவித்துள்ளனர். இக் கைத்துப்பாக்கியினைப் பயன்படுத்தி இந்நபர் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்நபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப்பொருட்களை தாம் கைப்பற்றியுள்ளதாக புத்தளம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!


**கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!**

சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்படும் நீள்வரிசைத் தூண்டில் வலையின் ஆயிரக் கணக்கான வசிய இரைத்தூண்டில்களில் கொழுவி ஆண்டுதோறும் 300,000இற்கும் அதிகமான கடற்பறவைகள் பலியாகின்றன.

# எதிர்க்கட்சிப் பா.உ.கள் இன்று கூடி ஆராய்வர்

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றக் கட்டடத்தில் இன்று கூடவுள்ளனர். நேற்று முன்தினம் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்றத்தில் சனநாயகம் நிலைநாட்டப்படவேண்டும் எனக்கோரி 114 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. இது தொடர்பாக இந்த 114 பேரும் இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று இன்று ஆராயவுள்ளனர். இது குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்புப் பத்திரிகையான சன்டேலீடர் கருத்து வெளியிடுகையில் இந்த 114 பேரும் முக்கிய முடிவெடுக்கலாமென எதிர் பார்க்கப்படுவதாகத் தெரிவித்திருந்தது. இதேவேளை சனாதிபதிக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு யோசிக்கப்படவுள்ளது.



கிளி. முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலய புதிய கட்டடத்தையும், அதனை நிக்கொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் அவர்கள் நாடாவைவெட்டித் திறந்து வைப்பதனையும் படத்தில் காணலாம். (படம்:சோதி)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில்

# கலாசாரச் சீர்கேட்டில் ஈடுபட்ட ஏழு பேர்

# கலாசாரத்தைப்பேணும் குழுவிடம் பிடிபட்டனர்

(வடமராட்சி)

வடமராட்சியின் துன்னாலைப் பகுதியில் கலாசாரச் சீர்கேட்டில் ஈடுபட்டிருந்த எழுவர் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் நேற்றுப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர் யுவதிகள் ஏனைய நால்வரும் திருமணமான ஆண்கள் எனவும்மேலும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்; துன்னாலையின் ஆட்கள் நடமாட்டமற்ற பற்றைப் பகுதியினுள் சந்தேகத்திற்கு இடமான வகையில் நேற்றுக்காலை இவர்கள் நடமாடியுள்ளனர்.

இதனை அவதானித்த பொது மக்கள் சிலர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினது கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டு வந்துள்ளனர். இதனையடுத்து அங்கிருந்த கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் இவர்கள் பிடிக்கப்பட்டு, எச்சரித்து விரட்டப்பட்டுள்ளனர். (33, 27)

## பேச்சு...

ஒப்படைக்க வேண்டும் அல்லது அவர் எங்கிருக்கிறார் என்பதைக் காட்ட வேண்டும் என இந்துப்பத்திரிகை கொழும்பில் இருந்து கட்டுரைகளை எழுதுபவரான பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்த இரண்டு நிலையுமே ஒரு கஷ்டமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடும். இதை எந்தளவிற்கு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் ஏற்றுக் கொள்ளாது என்பது தெரியாத நிலையிலே ஏற்கனவே சுமேத பெரேரா விடுதலைப்புலிகள் படையினருக்கு கருணாவுடன் தொடர்பிருப்பதாக நிருபித்தால் அது தொடர்பாக தாங்கள் விசாரணை நடத்தலாமெனக் கூறியுள்ளார். அவ்வாறான நிலையில் உள்ள அரசாங்கம் எவ்வாறு இதனை ஏற்றுக்கொள்ளும் என் பதால் விடுதலைப்புலிகளைத் திருப்திப் படுத்தினால் மாத்திரமே சமாதானப் பேச்சுவார்த்தைகான வாய்பிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போராட்டத்தை...

வேலைநிறுத்தப்போராட்டத்தை சுமுகமான முறையில் தீர்த்துவைக்கக்கோரியும் அத்துடன் இருதரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்து மாணவர்களின் கல்விச்செயற்பாட்டினை சுமுகமடையச்செய்ய வேண்டுமெனக்கோரியும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முழுமையாக விரிவுரைகளை பகிஷ்கரித்திருந்தது.

இப் பகிஷ்கரிப்பின் பின்னர் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாசினை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப்பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். (27,33)

# போதைப் பொருள் கடத்தலைக்கண்டித்து மன்னார் பேசாலையில் ஹர்த்தால்

(மன்னார்)

மன்னார் பேசாலையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பேசாலையை மையமாக வைத்து போதைப் பொருட்கள் கடத்தப்படும் சம்பவங்களைக் கண்டித்தே இந்த ஹர்த்தால் இடம் பெற்றுள்ளது ஆலய பரிபாலன சபையும் அந்தப்பகுதி மக்களும் இணைந்து நடத்திய இந்த ஹர்த்தால் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டன. வர்த்தக மையங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன. (32)

# பிந்துனுவெவ படுகொலை வழக்கில் 5ஆம் எதிரி நேற்று விடுதலை

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடைபெற்ற படுகொலை தொடர்பான வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஐந்தாம் எதிரி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பிந்துனுவெவ முகாமில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஐவருக்கு உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்தது.

மூன்று சிங்களக் கிராமவாசிகள், ஒரு பொலிஸ் அதிகாரி. மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி, ஆகியோரே அந்த ஐவருமாவார்.

இதனையடுத்து இந்த ஐவரும் தாக்கல் செய்த மேன்முறையீடு நேற்று ஐந்து பேர் கொண்ட நீதியரசர் குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில், ஐந்தாம் எதிரியின் மேன் முறையீட்டு மனுவிற்கு ஆட் சேபனை தெரிவிக்கப் போவதில்லை என்று சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சொலிசிற்றர் ஜெனரல் சித்ராஞ்ஜன் ஆர்.டி.சில்வா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.அத்துடன் ஐந்தாம் எதிரி தரப்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்னவின் சட்ட வாதங்களை ஏற்று நீதிபதி குழாம் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரான ரிரோன் ரட்நாயக்காவை விடுதலை செய்தது.இந்த மேன் முறையீடு தொடர்பான மனு விசாரணையை ஜூலை மாதம் 16 ஆம் திகதி வரை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி பண்டாரவளை பிந்துனுவெவபுனர்வாழ்வு முகாமில் 27 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (32)

## கருணா...

தன்னுடைய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கருணா எங்குள்ளார் என கேட்கப்பட்டபோது பாதுகாப்புக் காரணங்களுக்காக நானும் கேட்கவில்லை அவரும் சொல்லவில்லை என டக்ளஸ் தேவானந்தா கூறினார். ஆனால் கருணா சனநாயக நீரோட்டத்தில் இணைந்து அரசியலில் ஈடுபட விரும்பினால் அவர் இலங்கையில் தான் இருக்க வேண்டும் என்றார்.


பிறந்தநாள் வாழ்த்துக்கள்



சங்குவேலி வடக்கு, மானிப்பாயில் வசிக்கும்
விஜேய்திபன் - சுபாசினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

சங்கீதா/சங்கவி

தனது 1ஆவது பிறந்தநாளை 23.06.2004 அன்று தனது இல்லத்தில்
சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா,அம்மா, அம்மம்மா, மாமா சுதன், பெரியம்மா சுதாஜினி (சுதா) மற்றும் வன்னியில் இருக்கும் அம்மம்மா குடும்பத்தினர், மாமாமார், சித்தப்பாமார், அப்பம்மாமார், சித்திமார் யாவரும் சங்கு வேலி நாகதம்பிரான் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ வாழ்த்துகின்றனர்.

இராமநாதபுரம்
6ஆம் யுனிற், வட்டக்கச்சி

(4715)

மாமா,
பா.கோபாலகிருஸ்ணன்


## பெரும்...

ஆசைப்பிள்ளை ஏற்றம் சந்தியில் வந்து குவிந்தனர்.

காலை 9.00 மணிக்கு முன்னர் வருமாறு படையினர் தெரிவித்தபோதும் 10.45 மணிக்கே குறித்த இடத்துக்கு படையினர் வந்து சேர்ந்தனர். இவ்வாறு கால தாமதமாக வந்த படையினர் முன்னர் அறிவித்ததற்கு மாறாகச் சில பகுதிகளுக்கு மாத்திரமே செல்ல முடியும் என்றும் ஏனைய பகுதிகளுக்குச் செல்ல முடியாது. ஏனெனில், அப்பகுதிகளில் பெருமளவு வெடி பொருட்களைப் புலிகள் புதைத்திருக்கிறார்கள் என்றும் கூறி அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது காணி உறுதி, அடையாள அட்டை, குடும்ப விபரம் என்பவற்றைப் பதிவு செய்துவிட்டுச் செல்லுமாறும் பின்னர் தாம் அழைப்பதாகவும் கூறினர். இதனால், கூடியிருந்த மக்கள் ஆத்திரமடைந்தனர்.

பின்னர் அங்கு கூடியிருந்த நூறு பேரில் பத்துப் பேரை முதல் தொகுதியாக மதியம் 1.30 மணிக்கு அழைத்துச் சென்றனர். அடுத்த கட்டமாக கரம்பகம் ஒட்டு வெளிப் பூக்கிணத்தடிப் பகுதிகளைச் சேர்ந்த 25 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரைக் கூட்டிச்சென்றனர். ஏனையவர்கள் தமது சொந்த இடங்களைப் பார்வையிட முடியாது திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. படையினர் பத்திரிகை வாயிலாக அறிவிக்காத போதும் தகவலறிந்தே மக்கள் வந்திருந்தனர்.

இந்நிலையில் தமது வீடுகளைப் பார்த்துவிட்டு வந்தவர்கள் ஈழநாதம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோது எமது பரம்பரை வீடுகள் எதனையும் காணவில்லை. எமது வீடுகள் தரைமட்டமாகி அத்திவாரங்கள் மட்டுமே காணப்படுகிறது. நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த வீடுகள் இப்படிப்போய்விட்டது. அது மட்டுமல்லாமல் எமது கிராமம் அதிக தென்னைகளைக் கொண்டிருந்தது. அவை அழிக்கப்பட்டு வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்னரும் எமது தென்னைகள் தறிக்கப்பட்டுள்ளது. 180 இற்கு அதிகமான வீடுகளில் 20இற்கும் உட்பட்ட வீடுகளே இருக்கிறது. அவையும் கூரைகள் இல்லாதநிலையில் கதவு, நிலைகள் யன்னல்கள் எதுவுமின்றி இருக்கின்றன எனக் கூறிக் கண்ணீர் வடித்தார். (லோ,செ)


ஆங்கிலப் பூங்கா
(இங்லிஷ் கார்டின்)
சிறுவர்களுக்கான
ஆங்கில வகுப்புகள்
திருவையாறு
இங்லிஷ் வேர்க் ஷொப்பின்
புதிய பிரிவு விரைவில் ஆரம்பம்
தொடர்புகளுக்கு;
றிச்சாட் கமம்
வில்சன் வீதி
(கோவிந்தன் கடைச்சந்தியருகே)
(சீ.9853)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.